



ISSN: 2012 - 6352

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

நவம்பர் – 2013

மலர் - 45 இதழ் - 09

- **ஆசிரியர்**
  லெஸ்லி ஜெயகாந்தன்
- **இணை ஆசிரியர்**
  மலர்வேந்தன்
- **துணை ஆசிரியர்கள்**
  மெற்றில்டா இராஜேந்திரம்
  பெஸ்லீயோ வாஸ்
  பைந்தமிழ்க்குமரன் டேவிட்
- **ஆலோசகர்**
  A.G.இராஜேந்திரம்
- **கணினி வடிவமைப்பு**
  சுபாஜெனி சங்கர்
- **வெளியீடு**
  சமூகத் தொடர்பு நிலையம்.
  மட்டக்களப்பு மறை மாவட்டம்
- **முகவரி**
  சமூகத் தொடர்பு நிலையம்
  அ.பெ.எண் – 44
  மட்டக்களப்பு.
- **பதிப்பகம்**
  வணசிங்கா அச்சகம்
  மட்டக்களப்பு.


## உள்ளே




அன்புடன் உங்களோடு ........ 01

உலக இருளை அகற்றும் ........ 02

மாணவர் பக்கம் ........ 03

நெஞ்சில் கனக்கும் ........ 04

அருட்சகோதரர் மத்தியூ ........ 06

அழுத்தங்கள் நமக்கு ........ 07

மாற்று மோதிரம் ........ 09

இலக்கிய வீதி ........ 13

தமிழ்த்தூது ........ 15

பெற்ற தாயும் பிறந்த ........ 18

வட மாகாணத் தேர்தல் ........ 20

புனிதர்களை அறிவோம் ........ 22

மதங்கள் காலப்போக்கில் ........ 24

விவிலியம் கற்போம் ........ 27

அறிவை வளர்ப்போம் ........ 28


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com



விலை : 40/=

ஆண்டு சந்தா : 450/=
(தபாற் செலவு உட்பட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அன்புடன் உங்களோடு...

இலையுதிர் காலம் என்பது மரணமல்ல
இன்னொரு துளிர்ப்புக்கான தொடக்கம்
அஸ்தமனம் என்பது மறைவு அல்ல
இன்னொரு உதயத்துக்கான பதுக்கம்
என்கிறார் கவிஞர் வைரமுத்து.

ஆம், இம்மாதம் நாம் அனைத்து ஆன்மாக்களினதும் விழாவினைக் கொண்டாடுகின்றோம். பொதுவாக, மக்கள் இவ்விழாவினைக் கல்லறைத் திருவிழா என்றே அழைக்கின்றனர். பண்டைய உரோமையர்களின் சிந்தனைப்படி கல்லறைகள் இறந்தவர்களின் நகரம் என்று கருதப்பட்டது. ஆனால், அன்றைய கிறிஸ்தவர்களுக்கு இது வாழ்வோரின் நகரமாக விளங்கியது. இன்று அக் கல்லறைகளுக்கு வாழ்வோராகிய நாம் எடுக்கும் இந்த விழா, நமது வாழ்வு முடிவற்ற திருப்பயணம் என்பதை உலகிற்கு எடுத்துக்காட்டுகின்றது.

இறைவன் நமக்கு வழங்கியுள்ள வாழ்வு, மயானத்துடன் முடிந்துவிடும் மாயை அன்று. மாறாக, இது உண்மை, அன்பு, சகோதரத்துவம் என்னும் இறையாட்சி. விழுமியங்களைக் கட்டியெழுப்பும் கல்வெட்டுகள் காப்பியங்கள். எனவே, இன்று இருந்துவிட்டு நாளை இடிந்துவிடும் மணல் வீடல்ல நம்முடைய வாழ்வு. மாறாக, நம் வாழ்வு நிலைத்திருக்கும் நிஜம். ஏனெனில் இயேசுவில் நம்பிக்கை கொள்வோர் என்றுமே வாழ்வர்.

இயேசுவின் வாழ்வில் இறப்பு என்பது ஒரு மாற்றமே தவிர அழிவு அல்ல. "உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் ஒருபோதும் சாகான்" (அரு 11:28). ஆண்டவரில் விசுவாசம் கொண்டவன் இறந்தாலும், புதிய வாழ்வு, நித்திய வாழ்வு, நிரந்தர வாழ்வைப் பெறுகிறானே தவிர அவன் ஒருபோதும் அழிவதில்லை. குறுகிய கால வாழ்வை நிறைவாழ்வாக அமைத்துத் தீமையை எதிர்த்துப் போராடுகின்ற மனிதனை ஆண்டவர் உடனே எடுத்துக்கொள்கின்றார் என்று ஞானநூல் (ஞா.நூ 4:14) சான்று பகர்கின்றது.

"நீங்கள் யாரும் இறந்துவிடவில்லை, மற்ற மனிதர்களை உண்மையாக அன்பு செய்த யாரும் முழுவதும் இறந்துவிட முடியாது என்கிறார் சொப்பறினோ என்கின்ற அறிஞர்.

இன்று ஒவ்வொரு மனிதனும் அன்பிற்காக ஏங்குகின்றான். மனிதன் மனிதனை மதிப்ப தில்லை. அவனை மிதித்துக்கொண்டே வாழ்கின்றான். இறப்பு என்பது உயிர் உடலைவிட்டுப் பிரியும்போது மட்டும் நடப்பதல்ல. உடலில் உயிர் இருக்கும்போதே செத்த பிணமாக ஒரு மனிதன் வாழும்போது அவன் இறந்தவனாகத்தான் வாழ்கின்றான். அன்பு செய்யாத போதும், அடிமைப் பட்டுக் கிடக்கும்போதும் அர்த்தமற்ற வாழ்வு வாழும்போதும் நம்மைத் தழுவியிருப்பது சாவேயன்றி வாழ்வல்ல என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். இந்த உலகத்தில் நாம் வாழும்போதே பிறருக்கு எங்களைத் தியாகம் செய்ய வேண்டும்; பகிர்ந்து வாழவேண்டும்; எம்மையே நாம் இழக்க வேண்டும். இன்று நம்மில் இருப்பது போலித்தனமான பாசம். உண்மையான உறவுகளை உதாசீனப்படுத்துகின்றோம். மற்றவர்களை நோகப்பண்ணியிருக்கின்றோம். உண்மையான அன்பைப் புரியாமல் வாழ்கின்றோம்.

இருந்தால், மானின் தோல் ஆசனம்
மயிலின் இறகு விசிறி
யானையின் பல் அலங்காரம்
ஒட்டகத்தின் எலும்பு ஆபரணம்

மீன் செத்தா கருவாடு. மனிதா நீ செத்தா ....??? இறைவனில் நம்பிக்கை வைப்பதன் மூலம் நாம் நிலையான நித்திய வாழ்வை அடையமுடியும். வாழ்வுக் கப்பலை துன்ப அலைகளும், சோதனைப் புயல்களும் தாக்கினாலும், நம்பிக்கையை நங்கூரமாகக் கொண்டிருப்பவர்களை எதுவும் ஒன்றும் செய்துவிட முடியாது. எனவே, வாழ்வின் எச்சூழலிலும் நம்பிக்கை இழக்காதிருப்போம்.

சாவு என்பது, உடலைவிட்டு உயிர் பிரிவதல்ல, அன்பு செய்யாமல் இருப்பதே.
அடிமைத்தனத்தில் அல்லலுறுவதே. ஆண்டவரை அனுபவிக்காததே.

இறந்தோரின் கல்லறைகள் வாழ்வோரின் கருவறைகள்!

– ஆசிரியர் –

**இறைவார்த்தை**

**"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் ஒருபோதும் சாகான்"**

● (அரு 11:25)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



நம்பிக்கை ஆண்டைப் பிரகடனப்படுத்திய ஓய்வுபெற்ற திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கூறுகையில், "நம்பிக்கை என்பது கடவுள் நமக்கென ஆற்றும் அளப்பரிய செயல்களைப் புதிது புதிதாய்க் காண நமக்கு உதவிடும் வாழ்நாள் துணையாளன்" என நம்பிக்கையை இரத்தினச் சுருக்கமாக வரைவிலக்கணப்படுத்தியிருக்கிறார். நம்பிக்கையின் உறுதியான அடிப்படை நமதாண்டவர் இயேசுக் கிறிஸ்துவே! "நம்பிக்கையைத் தொடங்கி வழி நடத்துபவரும் அதை நிறைவுசெய்பவரும் இயேசுக் கிறிஸ்துவே". (எபி 12:12)

உலக இருள் அகற்றி ஒளியை ஏற்றி வைத்த இயேசுக் கிறிஸ்துவின் சீடர்களாக திருமுழுக்கின் வழி அவரோடு இணைக்கப்பட்ட நாம், நம்பிக்கையின் ஒளியாக வாழ அழைக்கப்பட்டுள்ளோம். நம்பிக்கை என்பது ஆண்டவரோடு நிற்கவும் அவரோடு வாழவும் எடுக்கப்படும் தீர்மானமாகும். உயிர்த்த இயேசுவோடு கொள்ளும் சந்திப்பின் மீது கட்டப்பட்ட நம்பிக்கையானது மீண்டும் கண்டெடுக்கப்பட வேண்டிய கொடை. அது வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இதற்குச் சான்று பகர வேண்டும். அதாவது, இந்த உலகில் உயிர்த்த இயேசுவின் உயிருள்ள அடையாளங்களாக மாற எம்மைப் பணிக்கின்றது. சுருங்கக் கூறின் நம்பிக்கையின் ஒளியாக வாழ அழைக்கப்படுகின்றோம்.

நம்பிக்கை கொண்ட மனிதர்கள் பயங்களைத் தாண்டிப் பயணிப்பவர்கள். இவர்கள் பயந்தவர்களுக்கும் நம்பிக்கை ஒளியை ஏற்றுவார்கள். ஒரு மெழுகுதிரி மற்றுமொரு மெழுகுதிரியை ஏற்றுவதால் அதற்கு இழப்பேதும் இல்லை. எனவே, நம்பிக்கையின்மையால் அணைந்துகொண்டிருக்கும் திரிகளைச் சரிசெய்து நன்றாய் எரிந்து ஒளிவீச உதவுவது கிறிஸ்தவர்களாகிய எமது கடமையாகும். இவ்விதம் நம்பிக்கை எனும் ஒளி அணைந்து போயிருக்கும் பலரின் வாழ்வுக்கு நம்பிக்கை ஒளியேற்றுவோம்.

"எவரும் விளக்கை ஏற்றி அதை ஒரு பாத்திரத்தால் மூடுவதில்லை. கட்டிலின் கீழ் வைப்பதுமில்லை. மாறாக, உள்ளே வருவோருக்கு ஒளி கிடைக்கும்படி அதை விளக்குத் தண்டின்மீது வைப்பர்" (லூக் 8:16). அதேபோன்று கிறிஸ்தவ நம்பிக்கையை வாழ்வதன் வழியாக அதனை ஒளிரச் செய்கிறோம். நமது நம்பிக்கை அறிக்கையிடப்பட வேண்டும், கொண்டாடப்பட வேண்டும், பகிரப்பட வேண்டும், வாழப்பட வேண்டும். நம்பிக்கை ஆண்டில் எடுக்கப்படும் ஒவ்வொரு முயற்சியும் நம்பிக்கையை மீண்டும் கண்டுபிடிப்பதன் மூலம் மகிழ்ச்சிக்கும் அதைப் பரப்புவதற்கும் உதவ வேண்டும்.

**பேரருட்தந்தை ஜோசப் பொன்னையா,**
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## பிலிப்பைன்ஸ் தீவுகளில் திருச்சபை

**கி**ழக்காசியாவில் கத்தோலிக்கர்களை அதிகமாய்க் கொண்ட நாடு பிலிப்பைன்ஸ் ஆகும். இங்குள்ள மக்களில் 90% கிறிஸ்தவர்களாகவும் 5% இஸ்லாமியர்களாகவும் மிகுதி 5% ஏனைய மதத்தின ராகவும் உள்ளனர். இதற்கான காரணம் ஸ்பெயின் நாட்டு மதக் கலாசாரம் ஆகும். போர்த்துக்கேய மாலுமியான பேர்டினன்ட் மஜெல்லான் என்பவர் கிழக்கிந்திய நாடுகளுக்கான பாதையைத் தேடி அலைந்தபோது, 1521ல் பிலிப்பீன்ஸ் வந்தடைந்தார். போர்த்துக்கேய, ஸ்பானிய மாலுமிகள் பிலிப்பீன்ஸ் நாட்டிலுள்ள மஸ்ஸாகுவா எனும் தீவில் இறங்கினர். இதற்கு முன் இவர்கள் பிலிப்பீன் நாட்டைப்பற்றி கேள்விப்பட்டிருக்கவில்லை. இங்கு சூழு, மிந்தநாவோ எனும் முஸ்லீம் கிராமங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட, நிர்வாகமற்ற, சுதந்திரமான மிகச் சிறிய கிராமங்களாகவே இருந்தன. இவர்களில் பெரும்பாலானோரை ஸ்பானிய மறை பரப்பாளர்கள் எவ்வித எதிர்ப்புமின்றி இலகுவாக மனந் திருப்பி கத்தோலிக்கராக்கக் கூடியதாய் இருந்தது. ஆனால், முஸ்லீம்களை இவ்வாறு செய்யமுடிய வில்லை. இதன்மூலம் ஸ்பானியர்கள் 300 ஆண்டுகள் முஸ்லீம்களுடன் போராட வேண்டி ஏற்பட்டது. அத்துடன், லூசோன் மலைப்பிரதேசங்களில் வாழ்ந்த பல்வேறுபட்ட மொழி பேசும் மக்களையும் அவர்களால் தங்கள் அதிகாரத்தின் கீழ் கொண்டுவர முடிய வில்லை. இருப்பினும், மஜெல்லானின் வருகை யுடன் பிலிப்பீன்ஸ் நாட்டின் பழங்குடி மக்கள் கத்தோலிக்கராயினர். பின்னர், ஸ்பானிய மாலுமிகள் 1570ல் மணிலாவில் இருந்த முஸ்லீம் குடியிருப்புகளையும் கைப்பற்றினர். இவ்வாறு, ஒரு நூற்றாண்டினுள்ளேயே தென் பகுதியிலுள்ள முஸ்லீம் பிரதேசங்கள் தவிர பிலிப்பீன்ஸ் நாடு முழுவதும் கிறிஸ்தவ நாடாய் மாறியது. இதற்காக அவர்கள் கஷ்டப்படவே இல்லை. அவர்கள் பயன்படுத்திய ஆடம்பரக் கொண்டாட்டங்களும், குருக்களின் உடைக ளும் சொரூபங்களும், செபங்களும், வழிபாடுக ளும் மக்களைக் கவர்ந்தன. முஸ்லீம் மக்களி டையே இருந்து இவர்களைக் காப்பாற்றுவதற் காகச் சிறிய சிறிய கிராமங்களை ஒன்று கூட்டி கிறிஸ்தவ நகரங்களில் குடியேற்றினர். நகரின் நடுவிலமைக்கப்பட்ட தேவாலயங்களில் பாவ மன்னிப்பு வழிபாடுகளும், திருமுழுக்குச் சடங்குகளும், இறந்தோரை அடக்கம் செய்யும் சடங்கு ஒழுங்குகளும் நிறைவாக இடம்பெற் றன. 1898ல் இதன்மூலம் ஸ்பானிய காலனித் துவ ஆட்சி முடிவுற்று நாடு முழுவதும் கிறிஸ்தவ மயமாகவிருந்தது.

பின்னரான காலகட்டத்தில், கிறிஸ்தவ துறவிகளுக்கு எதிராக, ஆயுதக் கிளர்ச்சி மேற் கொள்ளப்பட்டது. இதனால், 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிலிப்பீன்ஸ் நாடு முழுவதும் அமெரிக்க ஆட்சியின் கீழ் வந்தது. இவர்கள் கிறிஸ்தவத்தைப் பரப்புவதிலும், கல்வியறிவை மேம்படுத்துவதிலும் அதிக கவனம் செலுத்தி னர். இதனால், அனைவரும் கல்வியறிவு பெற வேண்டுமென்பதை வலியுறுத்தி சிலருக்கு மாத்திரமின்றி அனைவருக்குமே கல்வி புகட்டி னர். பல பாடசாலைகளும், கல்லூரிகளும் அமைக்கப்பட்டன. இதற்கென அமெரிக்காவிலி ருந்து ஆசிரியர்களும் வரவழைக்கப்பட்டனர். இவர்களில் சிலர் கத்தோலிக்க மதத்திற்கெதி ரான கருத்துகளைப் பரப்பி மாணவர் மத்தியில் வெறுப்பை வளர்த்தனர்.


- தொடர் 05ம் பக்.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இம் மாதத்தில் நாம் நம்மைவிட்டுப் பிரிந்து சென்ற எம் அன்புக்குரியவர்கள் பற்றி நினைவு கூருகிறோம். எம் வாழ்வில், தமது சிந்தனை, சொல், செயல்கள் மூலம் மாற்றங்களை, தாக்கங்களை, நன்மைகளை உருவாக்கியவர்கள் பற்றிச் சிந்திக்கின்ற மாதம் இது! அவர்கள் நம்மோடு வாழ்ந்து நின்ற நாட்களில் அவர்களது அருமை பெருமைகளை உணரமுடியாதவர்களாக நாம் இருந்த சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு. ஒருவர் அருகிலிருக்கின்றபோது அவரது பெறுமதியை நாம் உணராது போய்விட்ட சந்தர்ப்பங்கள் ஏராளம். அவர்கள் எம்மைவிட்டு நீங்கிய பின்னர் அவர்கள் குறித்து எண்ணி வேதனைப்பட்டு, அவர்களையிட்டு நாளும் பொழுதும் சிந்திக்கின்றவர்களாக நாம் இருக்கின்றோம்.

நமது இந்த உலக வாழ்வு நாமாக உருவாக்கிக் கொண்டதுமல்ல, நம்மால் இது ஆனதுமல்ல. நமக்கென்று ஓர் உலக வாழ்வு அமைகிறதென்றால் அதற்கான பங்களிப்பை நல்கியவர்கள் எத்தனை பேர்....?




குழந்தையாக நாம் இருந்தபோது நம்மைக் காக்கின்றவளாக, போஷிக்கின்றவளாக அன்னை இருக்கின்றாள். அவள் ஊட்டிய பால்தான் நம் உடல் அதற்கெதிரியான கிருமிகளை எதிர்க்கின்ற சக்தியை, போராடுகின்ற வல்லமையை எமக்குத் தந்தது. நாம் வளரும் போது நம் தந்தை நம்மைக் காக்கின்றார். தன் உழைப்பாலும், சிரமத்தாலும், வழிகாட்டுதலாலும் எம்மைப் பாதுகாக்கின்றார். தொடர்ந்துவரும் எம் வாழ்வுக் காலத்தில் நம் ஆசிரியர்கள், குருக்கள் நமக்கு வழிகாட்டும் ஆசான்களாக அமைகின்றார்கள். இந்தக் காலகட்டங்களில் நம் உடன்பிறப்புகள் நமக்கான தம் கரிசனை மூலம், அன்பின் மூலம், சமயங்களில் எம்மைப் பாடசாலைக்குப் பாதுகாப்பாக அழைத்துச் சென்றவர்களாக, எமது சிந்தனையையும் எண்ணங்களையும் பகிர்ந்து கொள்ளக்கூடியவர்களாக அமைந்திருக்கின்றார்கள். நம் உறவினர்கள் நம்மீது, நம் குடும்பங்கள் மீது காட்டிய பரிவினால் நாம் தவறுசெய்யும்போது நம்மைத் திருத்துமுகமாக கண்டித்திருக்கின்றார்கள், வீட்டில் தகவல் தந்து எமது எதிர்காலம் குறித்து உசார்படுத்தியிருக்கிறார்கள். அதன்மூலம் சமயங்களில் பெரும் பாதிப்புகள் எமக்கு வராமல் தடுத்திருக்கிறார்கள். எமது சகோதரிகளுக்காக நல்ல வாழ்க்கைத் துணைகளைத் தேடித் தந்திருக்கின்றார்கள். நமது பங்கைச் சேர்ந்தவர்கள், நம் குடும்பத்தை அறிந்தவர்கள், நல்ல கிறிஸ்தவர்களாக நாம் வாழ நமக்கு ஆலோசனைகளை, முன்மாதிரிகையைத் தந்தவர்கள்; இன்றிருக்கின்ற நாம் உருவாகிவரக் காரணமாக இருந்திருக்கின்றார்கள். இன்று அவர்கள் நம்மோடு வாழாவிட்டாலும், அவர்களது நினைவுகள் நம்மில் வாழவில்லை என்று சொல்ல முடியாது.

அவர்கள் நம்மோடு வாழும்போது, பல வேளைகளில் அவர்கள் எம்மீது காட்டிய பரிவு, கரிசனைகளைத் தொல்லையாகக்கூட நாம் கருதியதுண்டு. பல வேளைகளில் அதற்காக அவர்களை வெறுத்துமிருக்கின்றோம். ஆனால், அவர்களது பிரசன்னம் நம்மோடு வாழாவிட்டாலும், நாம் வளர்ந்து ஆளாகிவிட்டபிறகு, வாழ்வில் ஓர் உயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**- மாணவர் பக்கம் ....**

திருச்சபையும், அரசும் வேறாக்கப்பட்டு மதம் பாடசாலையிலிருந்து அகற்றப்பட்டது. ஜனநாயகம் மாத்திரம் வளர்ந்ததால் திருச் சபையின் முக்கியத்துவம் குறையலானது.

1912-1914இல் கத்தோலிக்க திருச் சபையில் பிளவுகள் ஏற்பட்டன. கிரகோரியோ அக்ளிபாயி என்பவரின் தலைமையில் பிலிப்பீன் சுயாதீன தேசிய சபை ஒன்று 36 குருக்களுடன் 500,000 மக்களுடனும் உருவாகியது. பின்னர் இது வலுவிழந்து அங்கிலிக்கன் சபையுடன் இணைக்கப் பட்டது. பின்பு 1914ல் 'இக்கிளேசியா நிகிறிஸ்றோ' எனும் தேசிய திருச்சபை ஆரம்பமாகி ஸ்பானிய ஆயர்கள் பதவிநீக்கம் செய்யப்பட்டார்கள்; சிறைகளிலும் அடைக் கப்பட்டார்கள். ஆனால், இன்று கத்தோலிக்க ஸ்பானிய எதிர்ப்பு அலைகள் ஓய்ந்து விட்டன. ஸ்பானியர் தங்களுக்குச் செய்த அளப்பரிய சேவைகளை மக்கள் நன்றியுடன் எண்ணிப்பார்க்கின்றனர்.

மேலும் மறைபரப்புப்பணிகள் மீண்டும் புதுப்பொலிவு பெற, இயேசுசபை யினர், டொமினிக்கன் சபையினர், பிரான்சிஸ் கன் சபையினர் பல்வேறு பணிகளை ஆற்றுகின்றனர். மனிலா ஆசியாவின் மிக முக்கிய கிறிஸ்தவ அறிவு மையமாய் விளங்குகிறது. இன்று பிலிப்பீன்ஸ் திருச் சபையானது ஜெகோவாவின் சாட்சிகள், செவன்டே அட்வென்றிஸ் போன்ற சபை களின் எதிர்ப்புகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. இருப்பினும், பிலிப்பீன்ஸ் திருச்சபை நாட்டின் அரசியலில் மிக முக்கிய பங்காற்றி வருகிறது. அடக்குமுறைக ளுக்குக் குரல் கொடுத்தும் தலைவர்களுக்கு எதிராகவும் செயற்பட்டு மேலும் வளர்ச்சிகள் பல கண்டுள்ளது. ❐

நிலைக்கு வந்தபிறகு, அவர்கள் பண்ணிய ஒவ்வொரு நன்மைத்தனமும் எம்மை எந்தளவு வாழப்பண்ணு கின்றன என்பதை நினைத்துப் பார்த்து, நமது கடந்தகால வாழ்வில் அவர்களை உதாசீனப்படுத்தியதற்காக வருந்தியுமிருக்கின்றோம். சமயங்களில் அவர் களை நன்றியோடு நினைவுகூர்ந்து அவர்கள் செய்த நன்மைகள் குறித்து சிலாகித்துப் பேசியு மிருக்கின்றோம்.

இன்று அந்த அன்புக்குரியவர்கள் பற்றிச் சிந்திக்கவும், அவர்களில் எம்மை விட்டுப் பிரிந்து இறை சந்நிதானம் சென்றுவிட்டவர்களை நினைவு கூர்ந்து அவர்களுக்காகக் கடவுளுக்கு நன்றி தெரி விக்கவும், அவர்களது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாறும் பொருட்டு இறைவனிடம் செபிக்கவும் அழைக்கப்படுகின்றோம். ஒருவர்தான் போய்விட்டாரே அத்தோடு கதை முடிந்தது என்ற உணர்வுடன் அவர்களை மறந்து வாழ முற்படுவது நன்றிகெட்டதனமாகும். நமக்கும் ஓர் ஆன்மா உண்டு. அதுமட்டுமல்ல, செத்துப் போய்விட்ட உறவுகளின் இரத்தம் இப்போது கூட நம்மில் ஓடிக் கொண்டுதான் இருக்கின்றது என்பதை எம்மால் மறுத்து ஒதுக்கிவிட முடியுமா...? இன்னும், தம் வாழ்விலே செய்த தவறுகளால் வாழ்வைத் தொலைத்து நின்றவர்களைக் கண்டு கூட, நாம் எப்படியெல்லாம் வாழக்கூடாது என்ற தீர்மானத்து டன் நல்லவர்களாக நாம் வாழத் தூண்டுதலாக இருந்தவர்களுக்காகவும் நாம் மன்றாடுவது பொருத்தமானதே!

பெற்று வளர்த்த இரத்தங்களையே நிர்க்க தியாக்கிவிடும் பிள்ளைகள் வாழும் இந்தக் கால கட்டத்தில், தமது அன்பினால் நம்மை வாழப் பண்ணியவர்களை நினைவில் மீட்டு செபிப்பது நமக்கு நிச்சயம் உயர்வைத் தரும். இறந்துபோன அவர்களது ஆன்மாக்கள் இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற நாம் செபிக்கத் தவறினால் நாளை நமக்கும் இதே கதி என்கின்ற உணர்வை மனதிருத்தி அவர்களுக்காக நமது வேண்டுதல் களைச் சமர்ப்பிப்போம்.

**- ஆனந்தா A.G. இராஜேந்திரம் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# அருட்சகோதரர் S.A.I. மத்தியூ அவர்களுக்கு அரச சாகித்திய விருது!

கிழக்கின் புகழ்பெற்ற எழுத்தாளரும் ஆய்வாளருமான அருட்சகோதரர் S.A.I. மத்தியூ அவர்கள் கடந்த ஆண்டு எழுதி வெளியிட்ட "சட்டம் சமயம் ஆட்சி ....." என்னும் நூலுக்கு அரச சாகித்திய விருது கிடைத்துள்ளது. ஏற்கெனவே, இரண்டு முறை - 1999ம் ஆண்டு "கிழக்கில் கிறிஸ்தவர்கள் ஆற்றிய கல்விப் பணி" என்ற நூலுக்கும், 2009ம் ஆண்டு "கர்ம யோகி பவுல்" என்ற நூலுக்கும் சாகித்திய விருது பெற்ற அவருக்கு இது மூன்றாவது சாகித்திய விருதாகும்.

'சட்டம் சமயம் ஆட்சி' என்னும் இந் நூலில் நவீன தொல்லியல் ஆய்வாளர்களின் கருத்துகளை உள்வாங்கி எகிப்திய பேரோ மன்னர்களின் காலத்தையும் இஸ்ராயேலர்களோடு அவர்களுக்கு ஏற்பட்ட உறவையும் மோயீசன் பத்துக் கட்டளைகள் பற்றிய புதிய கருத்துகளையும் வெளியிட்டிருந்தார். கடந்த 30ம் திகதி பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கலாசார மரபுரிமைகள் அமைச்சர் டீ.பீ. ஏக்கநாயக்கா தலைமையில் நடைபெற்ற அரச சாகித்திய விழாவில் இவ்விருது வழங்கப்பட்டதோடு, பல்வேறு துறைகளில் நூல்களை வெளியிட்ட படைப்பாளிகள் பலருக்கும் இவ்விழாவில் விருதுகள் வழங்கப்பட்டன.

கிழக்கிலங்கை கல்வித் துறையில் முத்திரை பதித்தவர் அருட்சகோதரர் மத்தியூ அவர்கள். ஆசிரியராக, அதிபராக, சிறந்த நிர்வாகியாக, வழிகாட்டியாக, கல்விமானாக, எழுத்தாளராக, ஆய்வாளராக பல்வேறு தளங்களில் தடம்பதித்த அவர், இதுவரை 55 நூல்களை எழுதி வெளியிட்டிருப்பதாகத் தெரிகிறது. தொடர்ந்தும் ஆர்வத்துடன் எழுதிக்கொண்டிருக்கும் அவர் கடந்த செப்டெம்பர் மாதம் 22ம் திகதி கல்லாறு அன்னை வேளாங்கண்ணி ஆலய ஆண்டுத் திருநாளின்போது, மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை அவர்கள் பதிவியேற்ற ஓராண்டு நிறைவை முன்னிட்டு தமது "உலகில் வாழ" என்னும் நூலை ஆயருக்கு சமர்ப்பணமாக்கினார்.

தொடர் 10ம் பக்......

– மலர்வேந்தன் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

–சென்ற இதழ்த் தொடர்ச்சி.....

இறுதியாக, வெளியகக் காரணிகளாக பொருளாதார, சமூக, தொழிநுட்ப, சமய, கலாசாரக் கட்டமைப்புகளில் அடிக்கடி நிகழும் மாற்றங்களும், முன்னேற்றங்களும், வீழ்ச்சிகளும் விரைவான அழுத்தங் களை பல்வேறு பரிமாணங்களாகத் தோற்றுவிக்கின்றன. போர் அழுத்தங்களும், அச்சுறுத்தும் சம்பவங்களும் நம் மனதுள் பதிவு செய்யப்படுகையில் அவையும் நாளடை வில் அழுத்தங்களாகின்றன.

வசப்படுதல் போன்ற பலவற்றை அவதானிக்கலாம். மேலும், நாம் நாளாந்தம் நடந்துகொள்ளும் முறை மற்றும் வாழும் முறை என்பவற்றைக் கொண்டும் நம்மை யறியாமல் அழுத்தத்திற்குள் உள்ளாகியிருப்பதை உணரக்கூடியதாக இருக்கும். பொதுவாக நோக்கினால் தூக்கமின்மை, போஷாக்குக் குறைவு, எப்பொழுதும் பரபரப்பான நபராக இருத்தல் ஆகியவையும்கூட அழுத்தங்களின் விளைவுகளே. இவைகளை அழுத் தங்களின் விளைவுகளாகவோ அல்லது அழுத்தங்க ளின் அறிகுறிகளாகவோ நாம் விளங்கிக்கொள்ளலாம்.

# அழுத்தங்கள் நமக்கு அப்பாற்பட்டவை அல்ல...



ஆ. அமலினி

இவ்வாறு, பல்வேறு முகங்களைக்கொண்டு தோற்றம் பெறுகின்ற அழுத்தங்கள் நம்மிடையே எவ்வகை விளைவுகளைக் கொண்டுவருகின்றன என்பதை நோக்குவோமாகில், அவற்றை நமது உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் உய்த்துணர முடியும். உடல் ரீதியான விளைவுகள் எனும்போது இருதய நோய், இரத்த அழுத்தம், உடல் மெலிவு மற்றும் உடல் நடுக்கம், படபடப்பு, சுவாசக் குறைவு முதலிய நோய்க ளும் இயலாமைகளும் ஏற்பட வாய்ப்பாகின்றது. அடுத்து, உளரீதியான பாதிப்புகள் எனும் வகையில் மன உளைச்சல், அதிகமான கோபம், அதிக உணர்ச்சி

ஆகவே, நம் அழுத்தங்களையும் அவ்அழுத்தங்களின் மூல காரணங்களையும் கண்ட டைந்த பின்னர் அவற்றுக்கான சரியான தீர்வுகளை நாமே சுயமாகக் கண்டுகொள்ள முடியும். ஆயினும், பொதுவாக நோக்கின், அடிப்படையில் அழுத்தம் தொடர்பான அதன் அடிப்படை அம்சங்களைத் தெரிந்துகொள்ளுதல் சாலச் சிறந்தது. அவற்றுள் முதன்மையானது 'எல்லோருக்கும் ஒரே வகையான அழுத்தங்களே காணப்படுகின்றது' என்கின்ற நமது தவறான கருத்து. ஆனால், உண்மையில் அழுத்தம் என்பது மனிதருக்கு மனிதர், இடத்திற்கு இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வேறுபட்ட பரிமாணங்களைக் கொண்டது. அடுத்து, 'அழுத்தங்கள் எப்பொழுதும் நமக்குத் தீமையையே வருவிக்கின்றது எனும் எண்ணப்பாடு. ஏலவே குறிப்பிட்டபடி சில அழுத்தங்கள் நம் திறனையும், ஆளுமையையும் விருத்தி செய்யத்தக்க சந்தர்ப்பங்களை வழங்கத்தக்கவையாக அமைகின்றன என்பதை மறுக்க முடியாது. மேலும், இவ்வகை அழுத்தங்களை நாம் எதிர்கொண்டு வெற்றிகொள்ள முற்படுகையில் அது நம் மனபலத்தை அதிகரிப்பதுடன், உளரீதியான ஊக்குவிப்பாகவும் செயற்படுகின்றது.



மேலும், 'அழுத்தங்கள் எங்கும் வியாபித்திருக்கின்றது. ஆதலால் நம்மால் எதுவும் செய்யமுடியாது' என்கின்ற பின்வாங்கும் நிலை. இது முற்றிலும் தவறான கருத்தாகும். 'இதுவும் அழுத்தமாகலாம்' என்று சந்தேகிக்கின்ற மிகச் சிறிய விடயங்களையும் கூட தவிர்க்காமல் முறையாகக் கையாண்டால் அவை பெரிய பிரச்சினைகளாக உருவெடுக்காது. உதாரணமாகக் குறிப்பிடின், போக்குவரத்தின்போது விபத்துகள் நேரும் என்பதற்காக நாம் நம் வாகனத்தை செலுத்தாமல் இருக்கின்றோமா....? இல்லையே! ஆதலால், அழுத்தங்களுக்கு நாம் இடம்கொடுக்கும் போதுதான் அதற்குள் சிக்கிக்கொள்கிறோம்.



தொடர்ந்து நோக்குவோமாகில், 'அழுத்தங்களைக் குறைக்க மிகச்சிறந்த முறை உள்ளது. அதையே பெறல்வேண்டும் என்கின்ற மனப்பதிவு. அழுத்தங்கள் தனிப்பட்டவகையில் மனிதனுக்கு மனிதன் வேறுபடுகின்றது எனும்போது, எவ்வாறு அனைவருக்கும் உகந்த வகையில் ஒரு தீர்வு உண்டு என எண்ண முடியும்? ஆக, அழுத்தங்களுக்குள் உள்ளாவது என்பதுதான் பொதுத்தன்மையே தவிர, அவற்றின் தன்மையும், அவற்றுக்கான தீர்வுகளும் வேறுபட்டுத்தான் இருக்கும். ஆகவே, நமது அழுத்தங்களுக்கான தீர்வுகளை நாம்தான் கண்டறிய வேண்டும், மற்றையவர்களால் அது வழங்கப்பட முடியாது.

இவற்றைத் தவிர, 'அழுத்தங்கள் எப்பொழுதும் அறிகுறிகள் மூலம் அறியப்படலாம்' என்றும் கூறப்படுகின்றது. அது தவறு. ஏனெனில், சில பொழுதுகளில் சில அழுத்தங்கள் எவ்வித அறிகுறிகளையும் நம்மில் கொண்டிராது. பொதுவாகக் குறிப்பிடின், யோகப் பயிற்சிகள் சிலரை மிகச் சிறந்த முறையில் உணர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கான பலத்தை வழங்கியிருக்கும். ஆயினும், அவர்களது அடிமன ஆழத்தில் அவ்வழுத்தங்கள் புதைக்கப்பட்டிருக்கின்றன என்பதுதான் உண்மை. இறுதியாக, 'பெரிய அளவில் அழுத்தங்கள் வெளிப்படும்போதுதான் அவை கவனிக்கப்படவேண்டும்' என எண்ணும் வழக்கம். வந்தபின் காப்பதைவிட வருமுன் காப்பது சிறந்தது அல்லவா? ஆதலால், மிக நுண்ணிய அறிகுறிகளாகத் தோன்றினாலும் அக்கணமே தகுந்த பரிகாரங்களைத் தேடுதல் பெரும் சிக்கல்களிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ள உதவும். ஆகவே, அழுத்தங்கள் என நாம் கருதுபவற்றைத் தவிர்க்க நம்மை நாமே ஒழுங்குபடுத்திக்கொள்ளவும், நம்மையும் நம்மைச் சுற்றியுள்ளவற்றையும் சமநிலையில் பேணுவதுடன் நம் உடல் ஆரோக்கியத்தையும், உள ஆரோக்கியத்தையும் காத்துக்கொள்வதால் வெற்றிகளையும் அதன்வழி நிம்மதியையும் பெற முயற்சி எடுப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாற்று மோதிரம்

யோ. பத்திநாதன்

சிறுகதை



அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை. மதிய உணவிற்குப் பின் லோகநாதன் தமது வீட்டில் இருந்து தொலைக்காட்சியில் ஒளி பரப்பாகிய "இஷ்டம்" திரைப்படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார். லோகநாதன் ஓர் ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர். பொதுவாகத் திரைப்படத்தில் நாட்டமில்லாதவரான அவர், அன்று படம் வித்தியாசமாகக் காணப்பட்டதால் அதனைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

மதியம் 1.00 மணிக்கு ஆரம்பமான திரைப்படம் 1.30 மணியானபோது அடுத்தடுத்து விளம்பரங்கள் புகுந்து கொண்டதால் சலிப்படைந்தவராக தனது இரு கைகளையும் ஒன்றோடொன்று பிசைந்துகொண்டபோது தற்செயலாக தனது கரத்தில் அணிந்திருந்த "மாற்று மோதிரம்" இல்லாதிருப்பதை அவதானித்தார்.

இற்றைக்கு 33 ஆண்டுகளுக்கு முன் தமது திருமண வார்த்தைப்பாட்டின்போது தனது மனைவியால் அணிவிக்கப்பட்ட குறிப்பிட்ட மோதிரம் இல்லை என்றதும் லோகநாதன் பதறிப் போய்விட்டார். மோதிரத்திற்கு என்ன நடந்திருக்கும்....? ஊகிக்க முடியாத அவரால் தொடர்ந்தும் திரைப்படத்தில் புலனைச் செலுத்த முடியாமல் அதனை அணைத்துவிட்டார்.

அன்று காலைமுதல் சிறிய நோயுடன் படுத்திருந்த மனைவியை எழுப்பித் தெரிவிக்க விரும்பினார். நோயுற்றிருக்கும் அவளுக்கும் தெரிவித்து, அவளையும் சங்கடத்தில் ஆழ்த்த வேண்டாம் என்று தீர்மானித்தவராய் தமக்குள்ளேயே பதறறப்படுக்கொண்டிருந்தார்.

என்னதான் தங்கத்திற்கு விலை குறைந்து விட்டது என்று தெரிவிக்கப்பட்டாலும், அரசின் புதிய தங்க வரியுடன் சேர்த்து பவுண் ஒன்று 45,000/= போகாதா...? இந்தக் கணக்கில் பார்த்தால் தொலைந்த எனது 1/2 பவுண் மோதிரம் 22,500/= ஆகுமே? ஓய்வூதியம் பெறும் என்னால் மேற்படி தொகையைச் சேமிக்க எவ்வளவு காலம் எடுக்கும்?

இது ஒருபுறமிருக்க, மனைவி எழுந்து கையைக் கவனித்து, "மாத்து மோதிரம் எங்கே" என்று வினவினால் என்ன சொல்வது? விரலில் சுமாரான இறுக்கத்துடன் காணப்பட்ட அந்த மோதிரம் எங்கே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எப்போது, எப்படித் தொலைந்தது என்று கூறுவது?" என்று புரியாமல் குழப்பத்தில் அமிழ்ந்துவிட்டார்.

மனைவி சுகயீனத்தோடு உறங்கிக் கொண்டிருந்ததும் லோகநாதனுக்கு வாய்ப்பாகப் போய்விட்டது. மெதுவாக எழுந்தார். தான் இன்றும் அதற்கு முதல் நாளும் வீட்டில் செய்த வேலைகளைப் பட்டியலிட்டார். ஒவ்வொரு வேலைகள் செய்த இடங்களிலும் குந்தியிருந்து தட்டிக் கிளறிப் பார்த்தார். 33 ஆண்டுகளும் விரலை விட்டுக் கழற்றாத மோதிரம் என்பதால் எங்காவது வைத்திருக்கக்கூடும் என்று பார்க்கவேண்டிய தேவை அவருக்கு ஏற்படவில்லை. நேரம் ஓடிக்கொண்டிருந்தது. அலுத்துக் களைத்தவராய் மனச் சோர்வோடு நாற்காலியில் அமர்ந்தார்.

இயேசுவின் வார்த்தைகளும் ஞாபகத்திற்கு வந்தன. 100 ஆடுகளை உடைய ஒருவனது ஓர் ஆடு தொலைந்து விட்டால், மற்றைய 99 ஆடுகளையும் வனாந்தரத்தில் விட்டுவிட்டு தொலைந்த ஆட்டைத் தேடிச் செல்லமாட்டானா...?" என் மனைவியின் ஞாபகமாக, அவளது கரத்தால் அணிவிக்கப்பட்ட, அவளது பெயர் பதித்த மோதிரத்தைத் தொலைத்த விதம் தெரியாது நிற்கிறேனே...! பணப் பெறுமதி மிகுந்த பொருள். யார் கையிலும் அகப்பட்டால் அது மீண்டும் எனக்குக் கிடைக்குமா....? செய்வதறியாது லோகநாதன் அமர்ந்துவிட்டார்.

அவரது மனம் சில காலத்திற்கு முன் பதவியிலிருந்தபோது இடம் பெற்ற ஒரு சம்பவத்திற்கு அவரை அழைத்துச் சென்றுவிட்டது.

மயில்வாகனம் விதானையார் கன்னன்குடாவைச் சேர்ந்தவர். லோகநாதன் பணியாற்றிய அலுவலகத்தில் பணிபுரிந்து ஓய்வுபெற்றவர். லோகநாதன் பதவியிலிருந்தபோது அவரைச் சந்திக்க அலுவலகம் வந்திருந்தார். இருவரும் நல்ல நண்பர்கள். மயில்வாகனம் பிறப்பால் இந்து. கலவர காலத்தில் கன்னன்குடாவில் இருக்க முடியாமையால் பூம்புகாருக்கு இடம் பெயர்ந்தவர். பரம்பரை விவசாயியான இவர் நல்ல ரக 'சிந்து' இன மாடுகளையும் வளர்த்து வந்தவர். இவரது மாடுகளிலொன்று ஒருநாள் காணாமல் போய்விட்டது. 10 நாட்களாக அவர் இந்த மாட்டை கன்னன்குடா, புதூர், வலையிறவு, காத்தான்குடி போன்ற ஊர்களில் தேடி களைத்து விட்டாராம். இவர் வீட்டிற்கருகில் வசிக்கும் கத்தோலிக்கர் ஒருவர், எங்கள் சமயத்தில் காணாமல் போனவற்றை தேடித்தருவதில் உதவக்கூடிய புனிதர் ஒருவர் உள்ளார்.



**அருட்சகோதரர் மத்தியு' ......**

இன்றைய நாளில் ஈழத்தில் குறிப்பிடத்தக்க கிறிஸ்தவ எழுத்தாளராக ஆய்வாளராக விளங்கும் அருட்சகோதரர் மத்தியூ அவர்களுக்கு தொண்டன் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, அருட்சகோதரர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து, அரும்பெரும் நூல்கள் பல ஆக்கி அளித்திட அருள் வேண்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



அவர் புனித அந்தோனியார். அவர் ஆலயம் சென்று உங்கள் குறையைக் கூறிப் பாருங்கள். தொலைந்த பொருள் நம்பிக்கையாய்க் கிடைக்கும் என்றாராம்.

மயில்வாகனம் விதானையாரும் குளித்து, முழுகி, தூய ஆடை அணிந்து, அந்தோனியார் ஆலயம் சென்று தனக்குத் தெரிந்த விதத்தில் மன்றாடி வந்தாராம். அன்றிரவே "உங்கள் மாடு தன்னாமுனையில் என்னிடம் பத்திரமாக உள்ளது, நீங்கள் வசதியானபோது வந்து மாட்டை எடுத்துச் செல்லுங்கள்" என்ற தகவல் ஒருவரால் தெரிவிக்கப்பட்டதாம்.

மயில்வாகனம் மறுநாள் அதிகாலையில் தன்னாமுனை சென்றபோது குறிப்பிட்டவர் அவரிடம்,

"ஐயா, கடந்த 10 நாட்களுக்கு முன் நான் வீதியில் நின்ற சமயம் இம்மாடு தனியாகக் கழுத்தில் கயிறுடன் வந்து கொண்டிருந்தது. இது அந்நியப்பட்டு வருகிறது என்று தீர்மானித்து எனது மாடுகளுடன் விட்டுவைத்துள்ளேன். மாட்டிலிருந்த குறி, விருது போன்றவற்றை அவதானித்தவர்கள் இது கன்னன்குடா பகுதி மாடு எனத் தெரிவித்தார்கள். நேற்றுக் காலைதான் நீங்கள் மாடு தேடித் திரிந்ததாகக் கேள்விப்பட்டேன். உங்களுடையதாக இருக்குமென்று கருதியதால் தகவல் அனுப்பினேன்"

என்று கூறி, எனது மாட்டை என்னிடம் ஒப்படைத்துவிட்டார் எனத் தெரிவித்த மயில்வாகனம்,

"மாடு கிடைத்துவிட்டதால் புனித அந்தோனியாருக்கு நான் என்ன செய்ய வேண்டும்? எனக்கு அந்தோனியாரைப் பற்றித் தெரிவித்த அன்பர் ஐந்து இறாத்தல் பாண் வாங்கி செவ்வாய்க்கிழமைகளில் புனிதரின் கோயிலடியில் கூடுகின்ற ஏழை எளியவர்களுக்குப் பங்கிட்டால் போதும் என்று கூறுகின்றார். இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

என்று அறிந்து கொள்ளவே என்னிடம் வந்ததாகக் கூறினார்.

"மாடும் சுமார் 20,000/= ற்கு மேல் பெறுமதி என்றும் அறியக்கிடைத்தது. உங்களுக்கு இழந்தமாடு கிடைத்துவிட்டது. புனித அந்தோனியார் எல்லோர் மேலும் இரக்கம் கொள்பவர். கிறிஸ்தவரல்லாதோரும் அவர் ஆலயம் வருவதற்கு இதுவும் ஒரு காரணம். செவ்வாய்க்கிழமைகளில் ஆலயம் சென்ற நீங்கள் இதனை அவதானித்திருப்பீர்கள்.

குறும்(புப்)பா – 119

**ஒருநாளில் வந்துவிடும் சாவு**
**ஓர்ந்தாலோ உள்ளத்தில் நோவு**
**அறியுங்கள் அழிவெல்லாம் அழிவல்ல மாற்றந்தான்**
**உருமாறி விழுமாழி அலை.**



- லவர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நீங்கள் உங்கள் வசதிக்கேற்ப பாணாக, அப்பமாக, கஞ்சியாக நீங்கள் விரும்பியவாறு உங்கள் நேர்த்தியைச் செலுத்தலாம். இருப்பினும் பாணோ, கஞ்சியோ நீங்கள் புனித அந்தோனியாருக்குக் காணிக்கை யாக்குவதைவிட அப்புனிதரின் வல்லமைக ளைப் பற்றி அறியாதோருக்கு அவரைப்பற்றி எடுத்துரைப்பதே மேலான நன்றியாக இருக்கக்கூடும்"

என்று கூறி அன்று அவரை அனுப்பி வைத்தது லோகநாதனின் நினைவில் சுற்றியது.

இந்த விடயத்தை லோகநாதனின் மனம் அசைபோட்டவேளை திடீரென அவருக் குள் ஒரு சிந்தனை தோன்றி மறைந்தது. எனது மாற்று மோதிரத்தையும் கண்டடை யக்கூடிய சந்தர்ப்பத்தை வழங்குமாறு நானும் புனித அந்தோனியாரை மன்றாடி னால் என்ன என்ற உத்வேகம் அவருள் எழுந்தது. உடனடியாக அவரது வீட்டில் உள்ள அந்தோனியாரின் படத்தின் முன்னின்று தொலைந்துபோன தனது மாற்று மோதிரம் பற்றி தனது மனைவி அறியவரும் பட்சத்தில் மிகவும் கஷ்டப்படுவாள் என்றும், எனவே அவள் இதனை அறிவதற்கு முன்பே குறிப் பிட்ட மோதிரம் தன் கைக்குக் கிடைத்துவிட உதவி புரியவேண்டுமென்றும் புனித அந்தோனியாரை நேர்த்தி வைத்து லோகநாதன் மன்றாடி நின்றார்.

இச்சமயத்தில் கட்டிலில் படுத்திருந்த அவர் மனைவி பின்பக்கம் சென்றாள். 'எல்லா இடங்களிலும் தேடிய நாம் இரவு தூங்கிய கட்டிலையும் ஒரு தடவை பார்த்து விடுவோம்' என்று மனைவி திரும்புவதற்குள் கட்டிலைத் தட்டித் துடைத்துப் பார்த்து விட்டார். மோதிரம் கிடைக்கவில்லை. பி.ப. 2.00 மணிவரை அதனைத் தேடி அலுத்தவர், பி.ப. 2.30 மணிபோல் நேர்த்தி வைத்து மன்றாடினார். பின்னர் மனம் சோர்ந்து செய்வதறியாது திண்ணையில் பாய் போட்டுப் படுத்துவிட்டார். உடனே நித்திரை வரவில்லை. அவரையறியாமல் தூங்கிப்போனார்.

பி.ப. 3.30 மணிக்குக் கண்விழிபட் டது. கூடவே, 'மோதிரத்தைக் காணவில் லையே' என்ற ஆதங்கமும் கூட எழுந்தது. எழும்பவும் விருப்பமின்றி குப்புறப்படுத்த வாறே வீட்டிலுள்ள மேசை, கட்டில் என்று அனைத்துப் பொருட்களின் கீழும் அவர் பார்வை அவரையறியாமலே சென்று கொண்டிருந்தது. அவரது கட்டிலின் கீழே ஓர் இடத்தில் ஏதோ ஒளிர்வது போன்று அவரது கண்களுக்குத் தெரிந்தது. 'அது என் மோதிரமாக இருக்கக் கூடாதா!' என்று மனம் பரிதவித்தது.


மனைவி கட்டிலில் படுத்தபடி இருக்க, லோகநாதன் அந்த ஒளி நோக்கி தவழ்ந்து கையை விட்டு எடுத்தார். அது அவர் மோதிரந்தான். மெதுவாக எழுந்தவர் தூய அந்தோனியாருக்கும், இறைவனுக்கும் நன்றி கூறியவராக மோதிரத்தைத் தம் கையில் போட்டுக்கொண்டார்.

'நம்பிக்கையாண்டில் எங்கள் நம்பிக் கையை அதிகரிக்க அனைவருக்கும் அந்தோனியார் உதவுகிறார்' என்று தெளிவு பெற்றார். விண்ணப்பித்தவாறு மனைவி அறியுமுன்பே மோதிரம் கிடைத்ததில் பரம சந்தோஷங் கொண்டார். நேர்கடனை நிறை வேற்ற செவ்வாய் எப்போது வருமென்று லோகநாதன் ஆர்வத்தோடு காத்திருக்கிறார். ❒



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலக்கியவீதி



## எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வழங்கிய தமிழியல் விருது 2012, 2013

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் ஆண்டு தோறும் ஈழத்திலும், வெளிநாடுகளிலும் வாழ்கின்ற ஈழத் துத் தமிழ்ப் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வண்ணம், தமிழியல் விருது வழங்கி வருகின் றது.

இவ்வாண்டு 5ஆவது தடவையாக 2012, 2013 ஆம் ஆண்டுகளுக்கான தமிழியல் விருதுகளை எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வழங்கியுள்ளது.

### சிறந்த நூலுக்கான தமிழியல் விருது – 2012

**உயர் தமிழியல் விருது :**

எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய ஸ்தாபகர் ஓ.கே.பாக்கியநாதன் உயர் தமிழியல் விருது பெறும் மூத்த படைப்பாளி - **பேராசிரியர் அ. சண்முகதாஸ்**

**சிறுகதை:**

**ரூபா 10,000/- பணத்துடன் துறையூர் வே.நாகேந்திரன் தமிழியல் விருது**

மாத்தளை பெ.வடிவேலன் எழுதிய **அட்சயவடம்**

**அரசஅதிபர் பூ.சங்காரவேல் தமிழியல் விருது**

கே.ஆர்.டேவிட் எழுதிய **பாடுகள்**

**நாவல்:**

**ரூபா 10,000/- பணத்துடன் நாவலாசிரியை பவளசுந்தரம்மா தமிழியல் விருது**

கலையார்வன் கு.இராயப்பு எழுதிய **உப்புக் காற்று**

**கவிதை:**

**ரூபா 10,000/- பணத்துடன் கவிஞர் எருவில் மூர்த்தி தமிழியல் விருது**

ஜின்னாஹ் ஷரிபுத்தீன் எழுதிய **வல்லுவம்**

**புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் தமிழியல் விருது**

எட்டியாந்தோட்டை மு.கருணாகரன் எழுதிய **அவமானப்பட்டவனின் இரவு**

**கவிஞர் கல்லாறன் மு.கணபதிப்பிள்ளை தமிழியல் விருது**

ஸர்மிளா செய்யித் எழுதிய **சிறகு முளைத்த பெண்**

**சிறுவர் இலக்கியம்:**

**ரூபா 10,000/- பணத்துடன் வைத்தியாச்சாரி மீராசாஹிபு அஹமது தமிழியல் விருது**

கலாநிதி அகளங்கன் எழுதிய **சின்னஞ் சிறிய சிறகுகள்**

ச.அருளானந்தம் எழுதிய **ஆடிப்பாடும் பாடல்**

**நாடகம்:**

**ரூபா 10,000/- பணத்துடன் பம்பைமடு கந்தையா – இரஞ்சிதமலர் தமிழியல் விருது**

எஸ்.முத்துக்குமாரன் எழுதிய **முத்துக்குமாரன் நாடகங்கள்**

**ஆவணமாக்கல்:**

**ரூபா 10,000/- பணத்துடன் திருமலை லூர்து அருளானந்தம் தமிழியல் விருது**

கலாநிதி செ.திருநாவுக்கரசு எழுதிய **எண்ணங்களும் எழுத்துகளும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**சமயம்:**

**ரூபா 10,000/-** பணத்துடன் **சிவநெறிப் புரவலர் சீ.ஏ. இராமஸ்வாமி தமிழியல் விருது**

க.ரஜீபன் எழுதிய **பெரிய புராண சூசனத்தில் சைவசித்தாந்தம்**

**கட்டுரை:**

**ரூபா 10,000/-** பணத்துடன் **வித்தியாகீர்த்தி ந.சந்திரகுமார் தமிழியல் விருது**

திருமதி கமலாம்பிகை லோகிதராஜா எழுதிய **பத்தும் பதியமும்**

**மொழிபெயர்ப்பு:**

**ரூபா 10,000/-** பணத்துடன் **பதிவாளர்நாயகம் எஸ்.முத்துக்குமாரன் தமிழியல் விருது**

க.ஐயம்பிள்ளை தலைமையில் மொழிபெயர்க்கப்பட்ட **இலங்கையின் வன்னி மாவட்டங்கள் : ஒரு கையேடு**

**வரலாறு:**

**ரூபா 10,000/-** பணத்துடன் **பண்பைமடு நாகலிங்கம்–நல்லம்மா தமிழியல் விருது**

சி.கா.கமலநாதன் எழுதிய **வரணியின் மரபுரிமைகள்**

## தமிழியல் விருது – 2013

**உயர் தமிழியல் விருது :**

எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய ஸ்தாபகர் ஓ.கே.பாக்கியநாதன் உயர் தமிழியல் விருது பெறும் இலக்கிய மேம்பாட்டுக்கு உரமாய் உழைத்த மிகச் சிறந்த மூத்த படைப்பாளி -

**இனிய இரா.நாகலிங்கம் ( அன்புமணி )**

**தமிழியல் விருது**

தலா ரூபா 15,000/- பணத்துடன் **வவுனியூர் ஸ்ரீ இராமகிருஷ்ணா – கமலநாயகி தமிழியல் விருது** பெறும் தமிழ் இலக்கிய மேம்பாட்டுக்கு உரமாய் உழைத்த 14 மூத்த படைப்பாளிகள் -

**இனிய தி.ஞானசேகரன்**
**இனிய சோ.பத்மநாதன்**
**இனிய அராலியூர் நா.சுந்தரம்பிள்ளை**
**இனிய அ.பாலமனோகரன்**
**இனிய கே.எஸ்.ஆனந்தன்**
**இனிய மாஸ்டர் சிவலிங்கம்**
**இனிய அருள் சுப்பிரமணியம்**
**இனிய அல்–அஸூமத்**
**இனிய த.துரைசிங்கம்**
**இனிய நிலா தமிழின்தாசன்**
**இனிய கோகிலா மகேந்திரன்**
**இனிய வி.தில்லைநாதன்**
**இனிய சு.சண்முகவடிவேல்**
**இனிய சோ.ராமேஸ்வரன்**

**இனநல்லுறவு தமிழியல் விருது :**

ரூபா 10,000/- பணத்துடன் **கல்விமான் வ.கனகசிங்கம் தமிழியல் விருது** பெறும் இன நல்லுறவுக்காக உழைத்த சிங்களமொழிப் படைப்பாளி

**இனிய கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன**

**ஓவியருக்கான தமிழியல் விருது**

ரூபா 10,000/- பணத்துடன் ஓவியர் கிக்கோ தமிழியல் விருது பெறும் சிறந்த ஓவியர்

**இனிய ஓவியர் ரமணி**

இவ்விருதுகள் 2013 ஒக்டோபர் மாதம் 20ம் திகதி மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழியல் விருது வழங்கும் நிகழ்வின்போது வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

**டாக்டர் ஓ.கே.குணநாதன்** – மேலாளர், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# தமிழ்த்தூது

சென்ற இதழ்த் தொடர்ச்சி .....

அருட்சகோ. S.A.I.மத்தியூ

## ஆரம்பக் கல்வி விபரங்கள்

**1920-1930 :** புனித பத்திரிசியார் கல்லூரி

**1928 :** E.S.L.C. ıம் பிரிவு

**1930 :** சீனியர் கேம்பிரிச் (விசேட சித்தி ஆங்கிலம், வரலாறு, தங்கப்பதக்கம், சொற்பொழிவு, பாடசாலை பல நூல்களின் ஆசிரியர், ஆங்கிலம், தமிழ் வரலாறு, புவியியல் பாடங்களில் சிரேஷ்ட பரிசுகள்)

**1931-1934 :** கொழும்பு புனித பேனாட் செமினரியில் வரலாற்றியல், தத்துவம், மனிதவியல், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் ஒப்பியல் கல்வி.

**1937-1939 :** உரோமாபுரி ஊர்பன் பல்கலைக் கழகத்தில் (பாப்பரசரின் கல்லூரி) இறையியல் சாஸ்திரம் "கலாநிதி" என்ற உயர்ந்த தரத்தில். இந்தப் பட்டநெறிக்காக எபிரேயம் விவிலியம் சார்ந்த கிரேக்க மொழி, இத்தாலியம் "கலைகளும் புதை பொருளும்" என்ற பலமொழிகளின் ஆய்வுகளின் பின்னர் மேற்கூறிய கலாநிதிப் பட்டம் பெற்றார்.

**1938 மார்ச் 18 :** உரோமாபுரியில் குருவாகப் பட்டம் சூட்டப்பட்டார்.

**1940-1945 :** ஆங்கிலம், தமிழ், வரலாறு ஆகிய நெறிகளை உயர்கல்வி நிறுவனத்தில் கற்றார். ஆசிரியப் பயிற்சி நெறியிலிருந்து விதிவிலக்குப் பெற்றார் (Excepted).

**1945-1947 :** இக்காலப் பகுதியில் தென்இந்திய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 'தமிழ் மொழியும், இலக்கியமும்' என்ற தலைப்பில் பட்டப் படிப்பும் விரிவுரையும் ஆற்றினார்.

**1947-1949 :** அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் ஆய்வுத்துறை பேராசிரியர். இக்காலத்திலே M.A., M.Lit. பட்டம் பெற்றார். அவரின் ஆய்வு 'பண்டைய தமிழ்ச் செய்யுள்களின் அமைப்புகள்' (Structure)

**1950-1951 :** ஐக்கிய அமெரிக்கா, தென் அமெரிக்கா ஆகிய நாடுகள் உட்பட பல ஜப்பானிய பல்கலைக்கழகங்கள் மற்றும் வடக்கு, தெற்கு, அமெரிக்க பல்கலைக் கழகங்களைத் தரிசித்து விரிவுரை ஆற்றினார்.

**1954 :** மலேசியாவில் விரிவுரைப் பயணத்தை ஆரம்பித்தார். இக்காலத்தில் இங்கிலாந்தில் ஐரோப்பியக் கண்டத்தில் கல்வியியல் நிறுவனம் பற்றி விரிவுரை ஆற்றினார்.

**1952-1955 :** இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கல்விப் பீடத்தில் உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றினார். 'கல்வித் தத்துவமும் தமிழ் கற்பித்தலின் நுணுக்கமும்' பற்றி விரிவுரையாற்றினார்.

**1955 :** ஆசிய பௌண்டேசன் தலைமையில் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு மலேசியா, கம்போடியா, வியட்னாம் ஆகிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டார்.

**1955 -1957 :** இலண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியில் ஒப்புநோக்கு கல்வியில் கலாநிதிப் பட்டம் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆராய்ச்சி கட்டுரையின் தலைப்பு 'முற்கால ஐரோப்பிய இந்தியக் கல்வி முறையும் முக்கியமாக பண்டைய தமிழ்க் கல்வியின் நோக்கும்'.

**1955 டிசம்பர் :** ஒக்ஸ்வேட் பல்கலைக்கழகக் கல்லூரியில் 'ஆங்கிலக் கல்வி முறையும் அதன் தர்க்க ரீதியான அனுகு முறையும்' எனும் தலைப்பில் பங்கு பற்றினார்.

**1957-1961 :** இலங்கை பல்கலைக்கழகத்தின் பட்டபின் M.A. Diploma பரீட்சையின் விரிவுரையாளர் 'தமிழ் கற்பித்தல் முறையும் சமூக முறையும்' என்ற தலைப்பு.

**1959 டிசெம்பர் :** நியூடெல்லியில் நடைபெற்ற புதிய கல்வி பங்குபற்றல் கருத்தரங்கில் தலைவர். 1960 லண்டன், ஸ்கன்டினேவியா, ரஷ்யாவில் முதியோர் பற்றிய கல்விச் சுற்றுலா.

**1960 :** மெட்ராஸ் அண்ணாமலை பல்கலைக்கழகங்களில் சொர்ணமகால் அனுசரணை விரிவுரையாளர்.

**1961 :** இந்தியக் கல்வி முறையில் பேராசிரியர் மலேசியப் பல்கலைக்கழகம் .....

**1964 :** சர்வதேச தமிழாராய்வு சங்கத்தின் இணைச் செயலாளர்.

**1965 ஒக்டோபர் - டிசம்பர் :** கோலாலம்பூரில் மலேசியப் பல்கலைக்கழக கலைப்பீட பதில் தலைவர்.

**1967 :** மேற்படி கலைப்பீட தலைவர் (Dand)

**1967 :** Iவது சர்வதேச தமிழாராய்ச்சிக் கருத்தரங்கின் முதன்மை ஆரம்ப கர்த்தா.

**1967 :** கெரேபியன் நாட்டில் இடம்பெயர்ந்த விபரம் பற்றிய ஆய்வுப் பிரயாணம்.

**1969 செப்டெம்பர் :** மலேசிய பல்கலைகழகத்திலிருந்து ஓய்வு.

**1970 :** வருகைப் பேராசிரியர். Paris, France, கல்விச் சுற்றுப் பயணம் அனுசரணை 'குள்வாங்கியன் பௌண்டேசன் ஸ்ரொக்ஹோம்' பல்கலைக்கழக விரிவுரையாளர். தலைப்பு குக்சாலா, ஸ்கண்டினேவியா ஆசிய நிறுவனம்.

**1971 :** நேப்பிள்ஸ் பல்கலைக்கழக விரிவுரையாளர்

**1973 :** பழைமை வாதத்தின் கல்வி காங்கிரஸில் கலந்துகொண்டமை.



"ஒருவரிடம் குறைகாணும்போது அவருக்காகச் செபிக்கவும் அவருக்காக உடல் ஒறுத்தல் களை மேற்கொள்ளவும் நாம் முயலவேண்டும். பின்னர் அவரது குறையை அவரிடம் எடுத்துச் சொல்ல வேண்டுமே தவிர, மற்றவரிடம் அல்ல" என்பதைத் திருத்தந்தை வலியுறுத்திக் கூறினார். புனித மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் நிறைவேற்றிய திருப்பலியில் மறையுரை ஆற்றும் பொழுதே இவ்வாறு குறிப்பிட்டார் திருத்தந்தை.



அமைதிக்கான தேடல் என்பது மிக நீளமானது. அது பொறுமையையும் விடாமுயற்சியையும் எதிர்பார்க்கின்றது என்ற திருத்தந்தை, தீமைக்கும் நன்மைக்கும் இடையேயான போர் நம் ஒவ்வொருவர் இதயத்திற்குள்ளும் இடம்பெற வேண்டும் என்ற அழைப்பையும் முன்வைத்தார். மேலும், அவர் தீமைக்கு எதிரான போராட்டத்தை நம் உள் மனதிற்குள் நாம் நடத்தாவிடில் ஏனைய போர்கள் அனைத்தும் பயனற்றவையே எனவும் கூறினார்.

தமிழ்த்தூது "தவத்திரு சேவியர் S. தனிநாயக மடிகளார் தவத்தை மேற்கொண்டவர். மட்டுமல்லர், அவர் தவத்தினால் பெற்ற ஒரு தமிழ்ப் புதல்வர். மொழிகள் பல கற்று உயர்ந்தவர். அவர் வாழ்ந்த காலம் 67 ஆண்டுகள் மட்டுமே!

தமிழைத் தவிர அவர் பாண்டித்தியம் பெற்ற பிறமொழிகளால் தமிழ் அன்னைக்கு அவர் ஆபரணங்களைக் கொணர்ந்தார். ஆங்கிலம், இத்தாலியம், இலத்தீன், பிரெஞ்சு, ஸ்பானியம், ஜேர்மனியம், ஹீப்றுக், கிரேக்கம், சமஸ்கிருதம், போர்த்துக்கீசம், ருஷ்ய, மலே, சிங்களம் ஆகிய பல மொழிகளில் அவருக்குப் பாண்டித்தியம் இருந்தது.

உலகளாவிய ரீதியில் பல்லாண்டுகள் பல தடவைகள் பிரயாணம் மேற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கொண்டு தமிழ்மொழியைப் பல மொழிக ளோடு ஆராய்ச்சி செய்து தமிழின் சிறப்பை உலகறியச் செய்த பெருமை தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரையே சாரும்.


வேறு தமிழ்த்துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் இத்துறைசார்ந்த செஞ்சொற் பிரயாணம் செய்திலர். இது நாம் கண்ட உண்மை. ஐரோப்பாவில் 2 வருடங்கள், இங்கிலாந்தில் 5 வருடங்கள், 10 ஆண்டுகள் இந்தியாவில், ஜப்பான், தென்கிழக்காசிய நாடுகள், மத்திய ஆபிரிக்கா, சோவியத் ரஷ்யா என பல நாடுகளுக்கும் சென்று தமிழ்மொழி ஆய்வு மேற்கொண்டு பாரதியின் கூற்றுப்படி உலகெலாம் தமிழோசை பரப்பிய பெருமை தவத்திரு தனிநாயகம் அடிகளா ரையே சாரும்.

இவர், பல்வேறு பல்கலைக்கழகங்க ளில் பல்வேறு துறைகளில் ஆய்வுகளை மேற் கொண்டார். பேராசிரியராக இருக்கும்போதே சாதாரண உதவி விரிவுரையாளராய் சேவை செய்யும் நோக்குடன் உதவி விரிவுரையாள ராகக் கல்வித் துறையில் இருந்துகொண்டே இலங்கையில் நாடளாவிய ரீதியில் பிரயாணம் செய்து கல்விப்பணி ஆற்றினார்.

பல்வேறு மொழிகளிலும் பல்வேறு பல்கலைக்கழக சஞ்சிகைகளிலும் தமிழாய்வுக் கட்டுரைகளையும் ஏனைய ஆய்வுக் கட்டுரை களையும் சரளமாய் எழுதியவர்.

'தமிழ்க் கலாசாரம்' என்ற வெளியீட்டை ஆரம்பித்து பல அறிஞர்களது ஆய்வுக் கட்டுரை களை வெளியிட்டதோடு தானும் ஆங்கிலத் தில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

1953 தொடக்கம் தெரிவுசெய்யப்பட்ட 27 தமிழாய்வுக் கட்டுரைகளையும் பிற ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதினார். அதை விபரிக்கின் இக்கட்டுரையின் விரிவு அதிகம்.



கலைக்களஞ்சியத்திற்கு உவெஸ்லி அடிகளாரைப்பற்றி சிறப்புக் கட்டுரை எழுதி யுள்ளார்.


தமிழ்த்தூது தனிநாயகம் அடிக ளார் தமிழையே சமயமாகக் கண்டவர். அக்கொள்கையே அவரது வாழ்வை ஆக்கிரமித்தது. இதனால் திருச்சபை உயர்பதவிகள் அவரை நாடி வரவில்லை. அவர் தேடியும் போகவில்லை. புலம்பலும் இல்லை. இதனை மதுரநாயகம் அடிகளார் தம் இரங்கலுரையில் தொட்டுக்காட்டினார்.

"அடிகளார் எந்தவொரு கட்சியை யும் சாரவுமில்லை, ஆதரிக்கவுமில்லை. தமிழ்த் தேசியவாதம் அதன் உச்சக்கட்டத் திலிருந்தபோது, அவர் தந்தை செல்வா வின் கூற்றான 'ஒன்று சேர்ந்த இலங்கை சமுதாயத்திற்கு உதவும்' என்பதில் நம்பிக்கை கொண்டார். காந்தியம் அவரது பேச்சு; அஹிம்சை அவரது மூச்சு. காலி முகத் திடலில் அவருக்காக குண்டான் தடி அடிகள் வாங்கினார்"

தந்தை செல்வாவின் மறைவின் பின் இரங்கல் உரைகளுக்கு அவர்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்

அழைக்கப்பட்டார். அழகு தமிழில் சுந்தரத் தேன் குழைத்து அவர் ஆற்றிய உரை களை ஒரு காலம் எதிர்கட்சித் தலைவராக இருந்த அ. அமிர்தலிங்கம் அவர்கள் தனிநாயகம் அடிகளின் மறைவின்போது நிகழ்த்திய இரங்கலுரையில் சுட்டிக்காட்டி னார்.

மேலும் இரங்கலுரை ஆற்றிய அறிஞர் பெருமக்களையும் அனுதாபச் செய்தி அனுப்பிய பெரியோரையும் பின்வரும் வரிசையில் காணலாம்.

- பேரா.ரா.பி. சேதுப்பிள்ளை
- பேரா. சு. வித்தியானந்தன்
- மலேசிய பிரதமர் மாண்புமிகு துங்கு அப்துல் ரஹ்மான்
- தமிழக முதலமைச்சர் மாண்புமிகு பக்தவத்சலம்
- மாண்புமிகு அ. அமிர்தலிங்கம்
- பாராளுமன்ற உறுப்பினர் க. ரத்தினம்
- சி. கதிரவேலுப்பிள்ளை (பா.உ)
- ச. அ. தருமலிங்கம் (பா.உ)
- ப. சந்திரசேகர் (ஆயர் இல்லம், யாழ்.)
- பேரா. க. கைலாசபதி (யாழ். பல்கலைக்கழகம்)

பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
எக்கேடாவது கெட்டுப் போகட்டும்
நான் இந்த நாட்டைவிட்டு
ஓடியே தீருவேன் என்றவாறு
லட்சக்கணக்கான தமிழர்கள்
இலங்கையை விட்டு வெளியேறிவிட்டனர்.
அரசாங்கத்தின் வேலையைச்
கலபமாக்கிவிட்டனர்.

கடலில் புளி கரைத்தது போல்
ஆகிவிட்டனர் அதில் பெருமை வேறு
அந்நிய நாட்டில் நாம்
இரண்டாம்தரப் பிரஜைகள் தானே!
என்பதை இவர்கள் உணர்வதில்லை.
அவ்வப்போது ஊருக்கு வந்து
வீண் ஜம்பம் அடித்துவிட்டுப் போகின்றனர்.

தமிழர்களுடைய சுய கௌரவம் என்னாயிற்று
தமிழர்களுடைய இடங்களை
ஏனையோர் பிடித்துவிட்டனர்
அந்நிய நாட்டில் வாழ்வதே
இவர்களுக்குப் பெருமையாம்
ஐயோ தமிழினமே இதுவா உன் கதி?

**அருள்மணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

- பேரா.க. இந்திரபாலா
  (யாழ். பல்கலைக்கழகம்)
- ராசா விஸ்வநாதன் (யாழ் முதல்வர்)
- க. சிவஞானம்
  (யாழ் மாநகராட்சி மன்ற ஆணையர்)
- பேரா. நேசையா
- பேரறிஞர் ஜேம்ஸ் T. ரெட்ணம்

அன்னாரைப் பற்றி மிக உயர்வாக எழுதி உள்ளனர். இவைகள் பேரறிஞர், பேராசிரியர் தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் அனுதாபப் புத்தகத்தில் நாம் காணக் கூடியவை.

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் ஈழத்தின் வேறுபல தவத்திரு அடியார்களைப் போன்றே தமிழ்மேல் பற்றுக் கொண்டவர். அவர் எழுதிய "ஒன்றே உலகம்" எனும் நூலை போர்த்துக்கலிலுள்ள ஏட்டுச் சுவடிகளை ஆராய்ந்து எழுதியுள்ளார். இந்த ஏட்டுச் சுவடிகள் பெரும்பாலும் கத்தோலிக்க சமயத்தையும் கத்தோலிக்க திருமறையையும் மற்றும் அதன் வழிபாட்டு முறைகளையும் செயல்முறைகளையும் கொண்டது. இது ஆய்வாளருக்குத் துணைபோகும் நூல்களாகும்.


அன்னாரின் பிறந்த நூற்றாண்டைக் கொண்டாடும் இவ்வேளையில், அவர் அடிக்கடி கூறும் "என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்ற வாசகத்தை மீண்டும் கூறி, அன்னாரின் புத்தகங்கள் வெளிவர புரவலர்கள் உதவவேண்டுமென பெரிதும் ஆசிக்கின்றோம். ஏக இறைவனை மாறு கொளாது "மக்கள் நேசமே மகேசன் நேசம்" என்ற தனிநாயக அடிகளார், வேலணை மாநாட்டில்

"என் கால்களோ தள்ளாடுகின்றன"
"என் கண்களோ பஞ்சடைகின்றன



உலகின் பல இடங்களில் இடம்பெறுவது போன்று இலங்கையிலும் மத சகிப்பற்ற நிகழ்வுகள் இடம்பெறுவதாக, இலங்கைக்கான வத்திக்கான் தூதர் பேராயர் ஜோசப் ஸ்பித்தேரி மடு அன்னைத் திருவிழாத் திருப்பலியில் கூறினார்.

நேபாள கத்தோலிக்க இளையோர், நாட்டுக்குப் பணி செய்வதில் பல்வேறு வழிகளை நமக்குக் காட்டுகின்றனர். மாற்றங்கள் இடம்பெற்றுவரும் இந்நேரத்தில் அவர்கள் நமக்கு நல்ல எடுத்துக்காட்டுகளாய் உள்ளனர் என்று நேபாள இடைக்காலப் பிரதமர் கிலாராஜ் ரெஜ்மி அந்நாட்டு கத்தோலிக்க இளையோரைப் பாராட்டியுள்ளார்.





என் தமிழ் ஆர்வமோ பற்றோ குறையவில்லை"

என்று கூறியதில் பொதிந்துள்ள பற்று என்பது, மக்கள் பற்று. ஆர்வம் என்பது, மக்கள் ஆர்வம் என்ற தலையாய உண்மையை எண்ணிப் பார்க்க, எண்ணத்தில் பதிக்க இந் நூற்றாண்டு வழிகோலும்.

**உசாத்துணை:**

1. கார்மேல் பாத்திமாக் கல்லூரி யின் அணையா விளக்கு - 1980 ஆசிரியர் புலவர் A.W. அரியநாயகம் - வெளியிட்டவர் வண. S.A.I. மத்தியூ
2. கட்டுரை ஆசிரியரின் நீண்ட காலத் தேடல்கள்
3. யாழ். பண்டத்தரிப்பு அனுதாபப் புத்தகத்திலிருந்து திரட்டியது.
4. ஆசிரியரின் நூலகம்.

~ முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வட மகாணத் தேர்தல் கூறும் செய்தி என்ன....?

உலகம் முழுவதும் பரபரப்போடும் ஆவலோடும் எதிர்பார்த்த வடமாகாணத் தேர்தல் நடந்து முடிந்துவிட்டது. எதிர்பார்த்ததிற்கும் மேலாக மக்களின் அமோக ஆதரவைப் பெற்று தமிழர் விடுதலைக் கூட்டணி அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றுள்ளது. இவைகளெல்லாம் பழைய செய்திகள். இந்த வெற்றியை நாம் எப்படிப் பயன்படுத்தப்போகிறோம். இலங்கை அரசியலிலும் தமிழர் வாழ்விலும் இது ஏற்படுத்தப்போகும் தாக்கம் என்ன? மாற்றம் என்ன? இந்த வெற்றியின் ஊடாக தமிழ் மக்களின் உள்ளக் கிடக்கை உலகத்திற்கு உறுதியாகத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் உலக நாடுகளின் எதிர்வினை எவ்வாறு அமையப் போகின்றது என்பன போன்ற பல்வேறு கேள்விகளும் எதிர்பார்ப்புகளும் எழுந்துள்ளன.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கான ஓர் இடைக்காலத் தீர்வாக இந்திய அரசால் முன்மொழியப்பட்டு இலங்கை அரசும் ஏற்றுக்கொண்டு உருவான மாகாணசபை முறைமையை முழுமையாகச் செயற்படுத்த இலங்கை அரசு என்றுமே முயன்றதுமில்லை, முன்வந்ததுமில்லை. மாறாக, அதன் அதிகாரங்களைக் குறைக்கவும் மாகாணங்களின் இணைப்பைத் துண்டித்துப் பலவீனப்படுத்தவும் தன்னுடைய இனவாத ஆக்கிரமிப்புக்கு ஏற்ற செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தவுமே முயன்றுவந்துள்ளது. அதன்விளைவே, முள்ளிவாய்க்கால்வரை தொடர்ந்த போரும் பேரழிவுகளுமாகும்.



இலங்கை சுதந்திரமடைய முன்பிருந்தே தொடங்கிவிட்ட இந்தப் பேரினவாத மேலாதிக்கச் சிந்தனை சுதந்திரமடைந்த பின்பும் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகளால் திட்டமிட்ட முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டே வந்தன. பதவிகளுக்கும் வசதி வாய்ப்புகளுக்கும் முட்டுக்கொடுத்து வந்த ஒருசில எட்டப்பர்களைத் தவிர ஏனைய தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து இவைகளை எதிர்தே வந்தனர். ஆயினும், "ஆண்டியின் குரல் அம்பலமேறாது" என்ற முதுமொழிக்கிணங்க சிறுபான்மையினங்களின் ஏக்கங்களை, அடிப்படை உரிமைகளுக்கான போராட்டங்களை அரசோ, உலக நாடுகளோ கண்டுகொள்ளவுமில்லை, அங்கீகரிக்கவுமில்லை. அதன்விளைவுதான் அது ஆயுதப் போராட்டமாக வளர்ந்து உச்சமடைந்தது. அதனைப் பொறுக்க முடியாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




ஜனநாயக சர்வாதிகாரிகள் அதற்குப் பயங்கரவாத முத்திரை குத்தி, 'பசுமைப் புரட்சி' என்று நில வளத்தை அழிப்பது போல் பயங்கரவாதத்தை அழிக்கிறோம், மக்களை மீட்கிறோம் என்னும் ஆர்ப்பரிப்புகளோடு தமிழ் மக்களின் போராட்ட வலுவை உடைத்து, அழித்திருக்கிறார்கள். உயிர ழியலாம், பொருளழியலாம், உணர்வுகள் என்றும் அழியாது. இலங்கையின் பாரம்பரியக் குடிகளான தமிழ் மக்கள் தமது இனத்தின் மொழியின் பண் பாட்டின் இருப்பை என்றுமே விட்டுக்கொடுக்க மாட்டார்கள். வீதிகளும் கட்டிடங்களும் ஏனைய அபிவிருத்திகளும் தமிழ்த் தேசியதிற்கும் அழிந்து போன உயிர்களுக்கும் முன்னால் வெறும் தூசு என்பதை வட மாகாணத் தமிழ் மக்கள் தெட்டத் தெளிவாக உலகிற்கு உணர்த்தியுள்ளனர்.

'இலங்கையில் இருப்பது பயங்கரவாதப் பிரச்சினையே அன்றி வேறெதுவுமல்ல' என்று பிரசாரம் செய்துவந்த இலங்கை அரசின் உண்மை முகத்தை, போர்க்குற்றங்களும், போருக்குப் பின்னரான நிலைமைகளும் வடபகுதி மக்கள் வாக்குச் சீட்டின் மூலம் உலகிற்குக் கொடுத்துள்ள பிரகடனமும் தெளிவாகக் காட்டியுள்ளது. அதுமட்டுமன்று, கிழக்கு மாகாணத் தமிழ்ப் பேசும் மக்களுக்கும் வட மாகாணத் தேர்தல் பெரும் படிப்பினையாக அமைந்துள்ளது. பொருளுக்கும் சில்லறைச் சலுகைகளுக்கும் மயங்கி யும், அச்சுறுத்தல்களுக்குப் பயந்தும், ஒற்றுமை யின்மையாலும் 'கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கும் மூடர்களாக' நாம் வாழக்கூடாது என்ற விழிப்புணர்வை வடமாகாணசபைத் தேர்தல் நமக்குத் தந்துள்ளது. ஒற்றுமை யோடும் தூர நோக்கோடும் இலட்சியப் பற்றோ டும் சிந்தித்துச் செயல்பட்டால் மட்டுமே இந்நாட்டில் சிறுபான்மை இனங்கள் தம் தனித்துவத்தைக் காத்துக்கொள்ளமுடியும் என்பதோடு அனைத்துலக மக்களின் ஆதர வையும் பெற்றுக்கொள்ள முடியும்.

பேரினவாத அரசுகள் சிறுபான்மை யினங்களின் ஜனநாயக ரீதியான எத்தகைய அணுகுமுறைகளையும் கருத்திலெடுத்தது மில்லை, கருத்திலெடுக்கப்போவதுமில்லை. 'ஒரே நாடு ஒரே மக்கள்' என்ற கவர்ச்சியான கோஷத்துடன் சிறுபான்மை இனங்களை விழுங்கி ஏப்பமிடவே காத்திருக்கின்றன.

நமக்குத் தேவை,
பதவியும் அபிவிருத்தியுமல்ல,
வீதியும் விளையாட்டுத் திடலுமல்ல,
வங்கிகளும் வர்த்தகமுமல்ல,
எமது வாழ்வியல் உரிமைகள் வேண்டும்.
பன்மைக்குள் எமது தனித்துவத்தைக் காப்பாற்றும் பாதுகாப்பு வேண்டும்.

ஒற்றுமையும் உறுதிப்பாடும் இருந்தால்
மற்றவை எல்லாம் தானே வரும்! ■



□ - மலர்வேந்தன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புனிதர்களை அறிவோம்...!

- மற்றில்டா இராஜேந்திரம் -

கார்த்திகை - 2013

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 சகல புனிதர்களின் பெருவிழா | 2 இறந்த ஆன்மாக்களின் நினைவு |
| 3 புனித மார்ட்டின் டி போரஸ் | 4 புனித சார்லஸ் பொரோமியோ | 5 புனிதர்களான சக்கரியாவும் எலிசபெத்தும் புனித சில்வியா | 6 புனித லெபோனான்ட் புனித பேர்ட்டிலஸ் | 7 புனித பில்லி புறோத் புனித கரினாவும் தோழியரும் | 8 புனித கொட்பிறி | 9 புனித ஜோன் லத்தரன் பேராலய நேர்ந்தளிப்பு விழா |
| 10 புனித பெரிய லியோ | 11 புனித மார்ட்டின் | 12 புனித யோசபாத் | 13 புனித ஸ்ரனிஸ்லாஸ் புனித பிரான்சிஸ் சேவியர் கப்ரினி | 14 புனித தெமேரியுஸ் புனித சிடோனியஸ் | 15 புனித அல்பேர்ட் | 16 புனித ஸ்கொட்லான்ட் மாகிரட் புனித கேட்ரூட் |
| 17 புனித ஹங்கேரி எலிசபேத் | 18 புனித பேதுரு, பவுல் பேராலய அபிஷேக நினைவு | 19 புனித மக்சிமஸ் புனித மத்தில்டா | 20 புனித எட்மன்ட் புனித பேர்ன்வோட் | 21 புனித மரியாளை காணிக்கையாக ஒப்புக் கொடுத்தல் | 22 புனித சிசிலியா | 23 புனித 1ஆ கிளெமென்ட் புனித கொலம்பன் |
| 24 கிறிஸ்து அரசர் பெருவிழா புனித அன்று டுங்லங் புனிதர்களான புளோறாவும், மேரியும் | 25 புனித கத்தரின் லபோரே | 26 புனித சில்வெஸ்டர் புனித ஜோன் பேர்க்மன்ஸ் | 27 புனித பசில் புனித மக்ஸிமஸ் | 28 புனித சொஸ்தனே புனித ஜேம்ஸ் | 29 புனித சட்டர்னினஸ் | 30 திருத்தூதர் புனித அந்திரேயா |

## புனிதர்களின் வரலாறு



### கார்த்திகை 05 : புனித சில்வியா

கத்தோலிக்க திருச்சபையானது, புனித மகா கிரெகறியின் தூய்மை மிகு பெற்றோரான சில்வியா, கோர்டியன், இவரது உறவினர்களான டர்சில்லா, எமிலியானா ஆகிய நால்வருக்கும் மரியாதை செய்கிறது. சில்வியா சிசிலி பிரதேசத்தைச் சேர்ந்தவர். இவரது கணவர் கோர்டியனோ உரோமின் அருகாமையில் வாழ்ந்தவர். இரண்டு ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்தனர். இருவரில் ஒருவரே கிரகெறியாகும். 573ம் வருடம் கோர்டியன் மரணிக்க, கிரெகறி தன் இல்லத்தைத் துறந்து சந்நியாசி மடத்தில் சேர்ந்தார். சில்வியாவும் தான் தனிமையான சந்நியாச வாழ்வு போன்று வாழ்வதை விட்டுப் புனித சாபா ஆலயத்திற்கருகிலிருந்த ஒரு சிறு வீட்டில் குடி புகுந்தார். அங்கிருந்து ஒவ்வொருநாளும் தன் மகனுக்குப் புதிய மரக்கறிகளை வெள்ளித் தட்டில் வைத்தனுப்புவது வழக்கமாயிற்று. ஒருநாள் கிரகெறி தன்னிடம் உதவி நாடிவந்த ஒரு பிச்சைக்காரனுக்குக் கொடுக்க எதுவுமில்லாததால், தாயின் வெள்ளித் தட்டுடன் மரக்கறிகளையும் கொடுத்துவிட்டார். சில்வியா தனது இவ்வுலக வாழ்வின் ஓட்டத்தை முடித்து வானகஞ் சென்று வெற்றிக்கேடயத்தைப் பெற 592ம் வருடத்திற்கும் 594ம் வருடத்திற்குமிடையிலான காலத்தில் செல்லலாமென்ற தீர்க்கதரிசனத்தையும் கொண்டிருந்தார். இவர் மரித்தபின் பரிசுத்த பாப்பரசராயிருந்த இவர் மகன் மகா கிரகெறி புனித அன்றூ ஆலயத்தில் தன் பெற்றோரின் படத்தை ஓவியமாக்கி வைத்தார். 16ம் நூற்றாண்டிலே பரிசுத்த பாப்பரசர் 8ம் கிளெமன்ற் புனித சில்வியாவை உரோம் நகரத் தியாகிகளின் வரிசையில் உள்ளடக்கினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**கார்த்திகை 23ம் திகதி : புனித 1ம் கிளெமன்ற்**



கிளெமென்ற் பிறப்பினால் உரோமனாக இருப்பினும், இவர் கொரிந்தியருக்கெழுதிய கடிதங்களை வாசிக்கையில் யூதப் பரம்பரையில் வந்தவரென்றே எண்ணத்தோன்றுகிறது. இவர் பவுஸ்டினஸ் என்பவரின் மகனாவார். இவர் மதமாற்றம் பெற்றமையைக் குறித்து அப்போஸ்தலர்களான புனித பேதுரு, புனித பவுல் இருவருக்கும் நன்றி பாராட்டினார். அத்துடன் புனித பவுல் பிலிப்பியருக்கெழுதிய திருமுகத்தில் இவரைத் தன்னைப் பின்பற்றும் கடின உழைப்பாளி எனக் குறிப்பிட்டுள்ளார். இவர் புனித பவுலுடன் உரோமுக்குச் சென்றார். புனித பேதுருவால் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். புனித பேதுரு, புனித பவுல் ஆகியோரின் மரணங்களின் பின்பு புனித லீனஸ் உரோமுக்கு ஆயரானார். பதினொரு வருடங்களின் பின் புனித கிளெட்டஸ் ஆயரானார். இவரது மரணம் 91ம் வருடம் நிகழ்ந்ததைத் தொடர்ந்து கிளமென்ற் ஆயரானார். கொரிந்தியத் திருச்சபையில் எழுந்த பிரிவினை காரணமாக இவர் அங்குள்ள கிறிஸ்தவர்களுக்கு உரோமைத் திருச்சபையின் சார்பாகக் கடிதங்களெழுதினார். இவை பழைய திருச்சபையினால் உயர்வான மதிப்புடன் திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்த பரிசுத்த புத்தகங்களுக்கு அடுத்தபடியில் வைக்கப்பட்டது சிறப்பானதாகும். இவர் 100ம் வருடம் இறந்தார். இறை விசுவாசத்திற்காக வேதசாட்சியானார் எனக் கூறப்படுகிறது.

## யாழ் ஆயர் ஓய்வுநிலை அறிவிப்பு



யாழ் ஆயர் பேரருள்தந்தை தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் தமது ஓய்வுநிலை பற்றி அறிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

ஆயர் அவர்கள் தமது 75ம் வயது நிறைவில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு திருச்சபையின் சட்டக்கோவைக்கு அமைவாக தமது ஓய்வுநிலை விண்ணப்பத்தைக் கோரியிருந்தார். வத்திக்கான் விசுவாசப் பரப்புரை ஆணையம், ஆயரின் விண்ணப்பத்தை ஏற்று அனுப்பிவைத்த முடிவுக்கு அமைவாகவே மேற்படி ஓய்வுநிலைத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக ஆயர் அவர்கள் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மதங்கள் தாண்டிய ஆன்மீகம் மறைந்து போகுமா...?

சென்ற இதழ்த் தொடர்ச்சி...



கிறிஸ்தவம் ஒரு மதமாக இருக்க முடியாது என்பதில் இரு கருத்து இருக்க முடியாது. ஆனால், மதமாக வளர்த்துவிட்டோம்! மதத்தைத் தாண்டிய ஆன்மீகத்தை வளர்ப்பதே இன்றைய அவசரத் தேவையாகும். இன்றும் ஆன்மீகத்தைப் பற்றிய தெளிவான பார்வையும் பயணமும் எம் மக்கள் மத்தியில் இல்லை என்றுதான் கூறவேண்டும். பக்தியையும் ஆன்மீகத்தையும் கலந்து கலப்படமாக்கி விட்டார்கள். அண்மையில் திருத்தந்தை பிரான்சிஸ் உலகியல் ஆன்மீகத்தின் (Spiritual Worldliness) அபாயங்கள் குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளார். இத்தகைய ஆன்மீகம் தன்னிறைவைக் காணும் அல்லது திருப்திக்காகச் செய்யும் செயற்பாடுகளாகவே அமையும். ஆன்மீகச் செயற்பாடுகள் இறைவனின் மகிமைக்காக ஆற்றும் பணிகளாக அமையவேண்டுமென வலியுறுத்தியுள்ளார். இதன் அடிப்படையில் எமது ஆன்மீகத் திருப்திக்காக (Self fulfillment) செய்யப்படும் மதக் கடமைகள் ஒருபோதும் உண்மையான ஆன்மீகத்தை வளர்க்க உதவாது.



ஆன்மீகத்தில் நிலவும் வெறுமை ஆன்மீகம் என்பதைப் பலரும் பலவாறு விளங்கிக்கொள்ள முயற்சிக்கின்றனர். நற்செய்தியில் ஊன்றிய ஆன்மீகந்தான் ஓர் ஆழமான இறையனுபவத்திற்கு இட்டுச்செல்லக்கூடியது. இன்று உலகியல் சார்ந்த (Secularism) வாழ்க்கை முறைகள் சுய இன்பத்தையும், நுகர்வு வெறியையும் அடிப்படையாகக் கொண்டவை. எவ்வளவு உலகில் தேடமுடியுமோ, அனைத்தையும் தேடி மகிழ்ச்சியாக வாழ்வதைக் குறிக்கோளாகக் கொண்டது என்றுகூடக் கூறலாம். ஒருவருடைய வாழ்வின் நிறைவின் அளவுகோல் எவ்வளவு வைத்திருக்கிறார் என்பதைப் பொறுத்து மதிப்பிடப்படுகிறது. ஆனால், உண்மையில் வாழ்வின் நிறைவும், ஆன்மீகமும் எப்படியான வாழ்க்கை வாழுகின்றோம் என்பதிலேயே தங்கியுள்ளது. ஒருவர் தன்னுடைய நிறைவிற்காக, பிறர்தரும் புகழுக்காக ஆன்மீகச் செயற்பாடுகளைச் செய்தால் கூட அது அவர் தனது மகிமையை, விளம்பரத்தைத் தேடுவதாகவே அமையும்.

ஆன்மீகம் என்பது வெறுமை என்ற அடித்தளத்தில் கட்டியெழுப்பப்படுவது என்பதே உண்மையாகும். இன்று ஆன்மீகம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

போர்வைக்குள் சுய விளம்பரத்தை, புகழை, பெருமையைத் தேடும் மக்களும் உள்ளனர். இறையாட்சியைக் கட்டியெழுப்ப வேண்டியவர்கள் தங்களுடைய சொந்த அரசாட்சியை கட்டுவதில் முனைப்புடன் செயற்படுவதையும் இன்று காணு கின்றோம். ஆன்மீகமோ அல்லது மதமோ இன்று மக்களின் செயற்பாடுகளுக்கு முகமூடியாகப் பயன் படுத்தப்படும் நிலையும் உள்ளது. உண்மையான ஆன்மீகம் அகத்தின் வெறுமையான ஊற்றிலி ருந்தே தோன்றுகின்றது. உலகில் வாழ்ந்து கொண்டே இத்தகைய பற்றற்ற பற்று" (Detached Attachment) வாழ்க்கை முறையை வாழ்வதே ஆன்மீகத்திற்கான பாதையாகும்.

## இயேசுவின் ஆன்மீகப் பாலைவனம்


கிறிஸ்தவ வாழ்வு அடிப்படையில் இயேசு வின் ஆன்மீகத்திலிருந்து ஊற்றெடுப்பதாகும். அவருடைய போதனைகளும் வாழ்வுமே அவரு டைய ஆன்மீகத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றது. பாலைவன அனுபவத்திலிருந்தே அவருடைய பணிவாழ்வுப் பயணம் இறைதந்தையை மகிமைப் படுத்துவதாகவே அமைந்தது. இத்தகைய பயணமே எமது ஆன்மீகப் பயணமாக அமைய வேண்டும். ஆன்மீக வரட்சி சில வேளைகளில் எதிர்மறையாக ஆன்மீகம் இல்லாத ஒரு வாழ்க்கை முறையைக் குறித்துக்காட்டப் பயன்படுத்தலாம். ஆனால் ஆன்மீக வரட்சி ஒருவித வெறுமையையும் குறித்து நிற்கலாம். அது இறைவனுக்கான வரட்சி யாக, பாலைவனமாக, இறையருள் பொழிவிற்கா கக் காத்திருக்கும் உள்ளத்தையும் சுட்டிக்காட்ட லாம். இதனை நேர்மறையாக நோக்குமிடத்து இறைவனுக்கான ஏக்கத்தையும் வெறுமையை யும் வெளிப்படுத்துகின்றது. இன்றைய எமது கிறிஸ் தவ வாழ்வை நோக்குமிடத்து, எமது ஆன்மீகப் பயணமானது ஒரு மேலோட்டமான சடங்குகளை, மதக் கடமைகளைப் பற்றிக்கொண்டி ருப்பதாக அமைகின்றது.

முனைவர் ஸ்ரன் அன்ரனி அருள் அ.ம.தி

ெறுமையில் ஊன்றிய ஓர் ஆன்மீக அனுபவத் திற்கான பயணம் கிறிஸ்தவர்களைப் பொறுத்த மட்டில் கானல் நீராகவே உள்ளது. அடிப்படையில் திருச்சபையின் அமைப்புகளிலும், மேய்ப்புப்பணி சார்ந்த பார்வை யிலும் மாற்றம் ஏற்பட வேண்டும். இது தீவிரமான மாற்றமாக அமைய வேண்டும். விசுவாச வாழ்வு பற்றிய தொடர்ச்சியான உருவாக்கமும் விழிப்புணர் வும் இன்றியமையாதது. இதற்கான ஆரம்பத்தை எப்போது தொடங்கப் போகின்றோம் என்பதுதான் பாரிய பிரச்சினையாகும். ஆனால், எமது பகுதி களில் திருவிழாக்களோடும், ஆடம்பரமான சடங்கு களோடும் கிறிஸ்தவம் வாழப்படுவதாக மாறி விட்டது. இதைப்பற்றி எவரும் பெரிதாக அலட்டிக் கொள்வதுமில்லை. இறையாட்சியைக் கட்டி யெழுப்புவது தவறாக விளங்கிக்கொள்ளப்படும் நிலையே காணப்படுகின்றது. இயேசுவின் இறை யாட்சிக் கனவு, கனவாகவே அமைந்துவிட்டது. நுகர்வு வெறியும் சுய இன்பத் தேடலும், இறையாட் சிக்கான தேடலை ஆர்வம் குன்றிய தேடலாக மாற்றிவிட்டது என்பது உண்மையே! திருவழிபாட டுக் கொண்டாட்டங்களும் ஆன்மீக அனுபவத்திற் கான தேடலாக மக்களுக்கு அமையவில்லை என்றே கூறலாம். இறைவனைத் தூரத்தே வைத்து வாழும் வாழ்க்கை முறை இலகுவானதும் வசதி யானதும் கூட. இதையே இன்றைய மக்கள்

**பூவைத்துத் திரியேற்றிப் புதையல்**
**புனிதநீர் தெளித்தழுத போதும்**
**சாவைத்தான் வென்றுவிட முடியாது முடியும்**
**பூவாகத் திரியாக வாழ்க!**

குறும்(புப்)பா – 120



மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விரும்புகின்றார்கள். நோவற்ற, வலியில்லாத, மாற்ற மில்லாத வாழ்க்கை பழகிப்போன ஒன்றாக மாறி விட்டது. இதுவே, இன்றைய கிறிஸ்தவ வாழ்க்கை யின் நிலையாகும்.

## உண்மையான ஆன்மீகத்தை நோக்கி..!


உண்மையான ஆன்மீகம் எது என்பதில் தெளிவு இன்றியமையாதது. இயேசுக் கிறிஸ்துவின் ஆன்மீகத்தில் கட்டியெழுப்பப்பட்டதே உண்மை யான ஆன்மீகமாக அமையும். இத்தகைய ஆன்மீகப் பயணத்தில் தடைகள், இடர்கள், சிலுவைகள், வலிகள், நோவுகள் உண்டு. இதை எதிர்பார்த்துத்தான் பயணிக்க முடியும். இயேசு எப்போதுமே தனது நலனையோ, தன்னிறை வையோ, மகிமையையோ எதிர்பார்த்து வாழவில்லை. இறைதந்தையைச் சார்ந்தே எப்பொழுதும் வாழ்ந்தார். இயேசுவின் சீடத்துவத்தில்தான் ஒரு கிறிஸ்தவனின் ஆன்மீகம் தங்கியுள்ளது. இதை விடுத்து எப்படிப்பட்ட ஆன்மீகச் செயற்பாடு களை, பணிகளைச் செய்தாலும் ஒருபோதும் இறையாட்சியைக் கட்டி யெழுப்பமுடியாது. இந்தக் கசப்பான உண்மையை இறை மக்களும், ஏன் திருச்சபைத் தலைமை களும் இன்றும் புரிந்துகொள்ளாதது கவலைக் குரிய விடயமாகவுள்ளது. உண்மையை நோக்கிப் பயணிக்கப் பங்குத் திருச்சபைகளும், பணியாளர் களும் இன்னும் தயாராகவில்லை. திருத்தந்தை யின் புதிய பார்வையும், வாழ்க்கை முறையும் எமது பணியாளர்களையும், அமைப்புகளையும் தொட்ட தாக இல்லை. சிலவேளைகளில் எமது அமைப் புகளைக் கட்டிக்காப்பதற்காக உண்மையை அடகுவைத்து வாழும் நிலைக்குத் தள்ளப்படும் போது கிறிஸ்தவம் சாரமற்ற மதமாகவே மாறிவிடும்.

> “நற்செய்தியில் ஊன்றிய ஆன்மீகந்தான் ஓர் ஆழமான இறையனுபவத்திற்கு இட்டுச்செல்லக்கூடியது. இன்று உலகியல் சார்ந்த வாழ்க்கை முறைகள் சுய இன்பத்தையும், நுகர்வு வெறியையும் அடிப்படையாகக் கொண்டது. எவ்வளவு உலகில் தேடமுடியுமோ, அனைத்தையும் தேடி மகிழ்ச்சியாக வாழ்வதைக் குறிக்கோளாகக் கொண்டது என்றுகூடக் கூறலாம்.”

உண்மைகள் காப்பெற் (Carpet) போடப்பட்ட வீதிகள் போன்று மூடி மறைக்கப்பட்டு, கிறிஸ்தவம் ஒரு திருவிழா மதமாகக் கடைப்பிடிக் கப்படும் நிலை இறையாட்சியைத் தொலைத்த வாழ்வாக கிறிஸ்தவத்தை மாற்றியுள்ளது. உண்மையான ஆன்மீகத்தை நோக்கிய பயணத்தில் எல்லைகள் தாண்டப்பட வேண்டும்; கோடுகள் அழிக்கப்பட வேண்டும்; சுவர்கள் தகர்க்கப்பட வேண்டும். இதிலே நோவுண்டு, வலியுண்டு, வெறுமையுண்டு என்பதில் சந்தேகமில்லை. இப்பாதையில் பயணிக்க நாம் விரும்புவோமா....? நிச்சயமாக இல்லை! எமக்குப் பழக்கப்பட்ட, வசதியான இலகுவான முறையில் பக்தியை மட்டும் வளர்க்கலாம்; உண்மையான ஆன்மீகத்தை வளர்க்க ஒரு தொடர்ச்சியான இறப்பு தேவை, மனமாற்றம் தேவை! இதுவே வாழ்விற்கான பாதையாகும்.

நன்றி
'பாதுகாவலன்'

## துணுக்குச் செய்திகள்...



இலங்கை அரசு பேசுவதைக் குறைத்து, அதிகமாக செயலில் ஈடுபட வேண்டுமென ஐ.நா.வின் இலங்கைக்கான மனிதாபி மான அலுவலக ஒருங்கிணைப்பாளர் சுபினய் நான்டி கேட்டுக் கொண்டார்.

இந்தியாவில் உள்ள 32 முக்கியப் பெருநகரங்களில் இன்று 22 நகரங்களுக்கு அன்றாட தண்ணீர் பற்றாக் குறை உள்ளது என அரசு புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் திகதி 30.11.2013

# விவிலியம் கற்போம் - 125

பரிசுப் போட்டி

## யோசுவா அதிகாரங்கள் 1, 2

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

மோசே இறந்தபின் யோசுவாவிடம் ஆண்டவர் "என் ஊழியன் மோசே இறந்துவிட்டான். நீ புறப்பட்டு யோர்தானைக் கடந்து மக்கள் அனைவரோடும் நான் கொடுக்கும் நாட்டுக்குச் செல். மோசேக்கு நான் கூறியபடி உன் ...................... படும் இடத்தை எல்லாம் உங்களுக்குக் கொடுப்பேன். பாலைநிலத்திலிருந்து லெபனான் வரையும், யூப்பிரதீசு பேராறு தொடங்கி இந்தியா நாடு முழுவதுமாகக் கதிரவன் மறையும் பெருங்கடல் வரையிலும் உங்கள் நிலமாக இருக்கும். உன் ...................... முழுவதும் எவனும் உன்னை எதிர்க்கமாட்டான். மோசேயுடன் இருந்தது போல் உன்னோடும் இருப்பேன். உன்னைக் கைநெகிழ விடமாட்டேன். வீறுகொள், துணிந்து நில். ஏனெனில், நான் வாக்களித்த ...................... இவர்கள் உரிமையாக்கச் செய்வாய். திடமும் உறுதியும் கொண்டு எல்லாச் சட்டங்களையும் கடைப்பிடி. திருச்சட்டநூலை உன் முன்னின்று அகற்றாதே. இரவும் பகலும் இதனைத் தியானம் செய். அப்பொழுது ...................... பெறுவாய். நீ செல்லுமிடமெல்லாம் உன்னோடு இருப்பேன்' என்றார். பின் யோசுவா மேற்பார்வையாளரிடம் "பாளையத்தின் நடுவே சென்று இவ்வாறு மக்களுக்குக் கட்டளையாகக் கூறுங்கள்; உங்களுக்கு வேண்டிய ...................... தயாரியுங்கள். ஏனெனில், இன்னும் மூன்று நாட்களில் ஆண்டவர் தரும் நாட்டுக்குச் செல்வீர்கள்" என்று மக்களிடம் கூறுங்கள்" என்றார். ரூபன், காத்தின் மக்களுக்கும் மனாசேயின் அரைக்குலத்திற்கும் ...................... "கடவுள் உங்களுக்கு இந்நாட்டை அளிப்பார். கீழை யோர்தானில் தங்கலாம். போர் வீரர்களாக உங்கள் சகோதரர்களுக்கு உதவுங்கள். பின் அந்நாட்டில் குடியேறுவீர்கள்" என்றார். அவர்கள் யோசுவாவிடம் "உங்கள் ...................... செய்கிறோம்" என்றனர். யோசுவா சித்தியிலிருந்து இரு ஒற்றர்களை வேவு பார்க்க அனுப்பினார். யோசுவா அவர்களிடம் "நீங்கள் சென்று நிலப் பகுதியையும், குறிப்பாக எரிகோ நகரையும் பாருங்கள்" என்றார். அவர்கள் சென்று ...................... எனும் பெண் வீட்டில் தங்கினர். எரிகோ மன்னன் இதையறிந்து ஆளனுப்பி அங்கு தங்கியுள்ள உளவாளிகளை உடனே வெளியே கொண்டுவரக் கட்டளையிட்டான். அவள் அவர்களை ஒளித்துவைத்த பின் "சிலர் என்னிடம் ...................... . ஆனால், சென்றுவிட்டனர். விரைவில் சென்று அவர்களைப் பிடியுங்கள்" என்றாள். அவர்கள் சென்றதும் அவள் அவர்களிடம் "இந்நாட்டை ஆண்டவர் உங்களுக்கு அளிப்பார் எனத் தெரியும். நான் உங்களுக்கு இரங்கியது போல என் தந்தை வீட்டுக்கு இரக்கம் காட்டுவீர்கள் என வாக்குறுதி அளித்து ஒரு ...................... கொடுங்கள்" என்றாள். அவர்கள் இரக்கம் காட்டுவதாகக் கூறியதும் சிவப்புக் கயிற்றைக் கட்டி சாளரம் வழியாக இறக்கிவிட்டாள். "மலைக்குச் சென்று மூன்று நாட்கள் தங்கிவிட்டுப் பின் உங்கள் வழியே செல்லுங்கள்" என்றுகூறி அனுப்பினாள். அவர்கள் "நாம் இந்நாட்டுக்குத் திரும்புகையில் இந்தச் சிவப்புக் கயிற்றைச் சாளரத்தில் கட்டி உன் குடும்பத்தாரை வீட்டிற்குள் சேர்த்து வை" என்றனர். அவள் இணங்கினாள். அவர்கள் தப்பிச்சென்று யோசுவாவிடம் "அந்நாட்டினர் நம்மைக் கண்டு பயப்படுகின்றனர்" என்றார்கள்.

**விடைகள்:** **நாட்டை, யோசுவா, அடையாளத்தையும், வந்தனர், இராகாபு, காலடி, நலம், கட்டளைப்படியே, உணவை, வாழ்நாள்.**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதி அனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை வளர்ப்போம் - 125

## பரிசுப் போட்டி




**(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)**

1. உலகின் மிக நீளமான காவியம்
   (மகாபாரதம் - இராமாயணம் - சாகுந்தலம்)

2. 'நான்மாடக் கூடல்' என்று அழைக்கப்படும் நகரம்
   (நாஞ்சில் - மதுரை - காஞ்சிபுரம்)

3. சிவப்புக் கிரகம் என்று அழைக்கப்படுவது
   (வெள்ளி - புதன் - செவ்வாய்)

4. பழங்களில் உள்ள சீனிப் பொருள்
   (குளுக்கோஸ் - பிரக்டோஸ் - சுக்ரோஸ்)

5. பாம்பின் கால் ................................
   (பிடாரன் அறிவான் - பருந்தறியும் - பாம்பறியும்)

6. 'புதுக்குரல்' என்பது
   (உவமைத் தொகை - வினைத் தொகை - பண்புத் தொகை)

பெயர் : ..........................................................................................

முகவரி: ..........................................................................................

..........................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 125**
**தொண்டன்**
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
..........................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# போட்டி முடிவுகள்...

## விவிலியம் கற்போம் - 123 விடைகள்

பாறை, தலைமுறையின், இருந்ததில்லை, ஒதுக்கினார், நாட்டை, மக்களை, ஓர், திருச்சட்டம், இசக்காரே, இஸ்ரயேலை.

## அறிவை வளர்ப்போம் - 123 விடைகள்

1. சிலிக்கன்
2. தொண்டை
3. கப்பற் தலைவர்
4. காசல்றீ
5. படையும் நடுங்கும்
6. உவமைத் தொகை

## பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குருஸ் CRS

**போட்டியின் இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை அளித்து 300/= பரிசு பெறுவோர்**

- **S.** ஹரிசாந்
  59/13, 2ம் ஒழுங்கை,
  மணல்சேனை,
  கல்முனை.
- கை. ‌ டானியா,
  24/11, 1ம் குறுக்கு,
  செல்வநாயகம் வீதி, இருதயபுரம்,
  மட்டக்களப்பு.

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுவோர்**

- மெக்கன்சி ஸ்பெக்,
  பிரதான வீதி,
  வாழைச்சேனை.
- **R.** தனுஸ்ரன்,
  32, சித்திவிநாயகர் வீதி,
  அமிர்தகழி, மட்டக்களப்பு.

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 75 முடிவுகள்

- **முதலாம் பரிசு - 400/=**
  க. அபிநயா,
  8ம் குறுக்கு,
  திராய்மடு, மட்டக்களப்பு.
- **இரண்டாம் பரிசு - 300/=**
  அ. கிஷானா,
  59A, 2ம் ஒழுங்கை,
  மணல்சேனை,
  கல்முனை.
- **மூன்றாம் பரிசு - 200/=**
  ச. ஹெலன் பிரீத்திக்கா,
  65, திருச்செந்தூர் வீதி,
  கல்லடி, மட்டக்களப்பு.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# காற்றில் கலந்து வரும்

## இலங்கை வானொலி தேசிய சேவையில்

**கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்**

**நவம்பர் - 2013**

**கத்தோலிக்க நற்சிந்தனைகள் — காலை 5.55 மணி**

நாள் : 02, 03, 04, 05, 06, 07, 08,
16, 17, 18, 19, 20, 21, 22

**புதிய உலகம் (வளர்நதோர் நிகழ்ச்சி) — மாலை 7.00 மணி**

நாள் : 10, 24

வழிபாடு, வேரைத்தேடி, விவிலிய நாடகம்,
சிந்தனை உரை, திருச்சபைச் செய்திகள், கவிக்குரல்,
பாடல்கள் இன்னும் ......

**சிறுவர் உலகம் (சிறுவர் நிகழ்ச்சி) — மாலை 7.00 மணி**

நாள் : 12, 26

கதையும் கருத்தும், குறுநாடகம், விவிலியக் கதைகள்,
பாடல்கள் இன்னும் ......

---

நிகழ்ச்சித் தொகுப்பு:
- மலர்வேந்தன் -

தொடர்பு:
சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org